Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 சித்திரை-13 26-04-2005 செவ்வாய்க்கிழமை ஓசை-67



S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

T.P: 024-222 4247

உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்

(சி-11481)

## மேல்மாகாணசபை முதலமைச்சர் விவகாரம்

# சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவின் கோரிக்கை

# ஜே.வி.பி உறுப்பினர் குழுவால் நிராகரிப்பு

## ஆதரித்து வாக்களிக்கப்போவதாகவும் எச்சரிப்பு

(கொழும்பு)

**மேல் மாகாணசபை முதலமைச்சர் சிறிசேன கூரேக்கு எதிராக ஐ.தே.கட்சி கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களிக்குமாறு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்த கோரிக்கையை ஜே.வி.பி நிராகரித்துள்ளது. முதலமைச்சர் றெஜினோல்ட் கூரே பதவியை விட்டு விலகாது விட்டால் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கப் போவதாகவும் ஜே.வி.பி மேல் மாகாணசபை உறுப்பினர் குழு எச்சரித்துள்ளது.**



நேற்று நாடு திரும்பிய சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜே.வி.பியின் மேல்மாகாணசபை உறுப்பினர்களுடன் அவசர சந்திப்பொன்றை நடத்தினார். மேல்மாகாணசபையில் முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று கொண்டு வரப்படவுள்ளதால் இவ் அவசர சந்திப்பிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இச்சந்திப்பின் போது மேல்மாகாணசபை முதலமைச்சர் றெஜினோல்ட் கூரே பதவி விலக வேண்டுமென ஜே.வி.பி தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இல்லையேல் தாம் அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது அவருக்கு எதிராக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தந்தை செல்வநாயகத்தின் நினைவு நாள் நிகழ்வுகள்

தந்தை செல்வாவின் 28 ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். முற்றவெளியில் அமைந்துள்ள தந்தை செல்வா நிவைுத் தூபியின் முன்னால் தென்னிந்தியத் திருச்சபை பேராயர் ஜெபநேசன் அடிகளார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல்துறையினர், தமிழரசுக் கட்சி ஆதரவாளர்கள் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

பிற்பகல் 4.00 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நினைவுப் பேருரையும் இடம்பெறவுள்ளது.

இதேவேளை தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் மறைந்த தந்தை செல்வநாயகத்தின் 28 ஆவது சிரார்த்த தினத்தை திருகோணமலையில் கடைப்பிடிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்று காலை 7.30 மணிக்கு விஸ்வநாத சிவன் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகளும் அதனைத் தொடர்ந்து சிவன் கோவில் முன்றலில் அமைந்துள்ள அன்னாரின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்தலும் இதனைத் தொடர்ந்து நினைவுக்கூட்டமும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கருணா குழு உறுப்பினர் கறுவொலவில் சூட்டுக்கொலை

### -மேலும் ஒருவர் கடத்தல்

மட்டக்களப்பின் எல்லைப் பகுதியிலுள்ள பொலநறுவை மாவட்ட கறபொல கிராமத்தில் கருணா குழுவைச்சேர்ந்த ஒருவர் நேற்றுப் பிற்பகல் 4.30 மணிக்கு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.அவருடைய பெரும்பான்மையின் நண்பர் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாகப் பொலிசார் தெரிவிக்கின்றனர்..

கருணா குழு உறுப்பினர் படுகாயமடைந்த நிலையில் பொலநறுவை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டபோது அங்கு மரணமடைந்துள்ளதாக சிறிலங்கா பொலிசார் தெரிவிக்கின்றனர். செல்லத்துரை கோபால்குமார் என்ற கருணாகுழு உறுப்பினரே பலியானதாகவும் ரணதுங்க என்ற பெரும்பான்மை இனத்தவர் கடத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வேம்பையடி அரசியல்துறை அலுவலகத்துள் புகுந்து சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் அடாவடி

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் நாவிதன் வெளிப் பிரதேசம் வேம்பையடித்திடலிலுள்ள விடுதலைப்புலிகளின் அரசியல் துறை அலுவலகம் நேற்று முன்தினம் நள்ளிரவு சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை அரசியல் துறை இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளது. நேற்று முன்தினம் நள்ளிரவு மதுபோதையில் வந்த மண்டூர் விசேட அதிரடிப்படை முகாமைச் சேர்ந்த அதிரடிப்படை அத்துமீறி நுழைந்து சுற்றிவளைத்துத் தேடுதல் என்ற போர்வையில் அடாவடித்தனம் புரிந்ததாக தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர். விடுதலைப்புலிகள் இதனை வன்மையாகக் கண்டித்துள்ளதோடு இது போர் நிறுத்த உடன்படிக்கையை மீறும் செயல் என குற்றம் சாட்டியுள்ளனர்.

## சுனாமிபொதுக்கட்டமைப்பினை எதிர்த்து ஜே.வி.பி. பிரச்சார நடவடிக்கைக்கு ஏற்பாடு

### -விமல்வீரவன்ச அறிவிப்பு

(கொழும்பு)

வடக்குக்கிழக்கு சுனாமி உதவிகளைப் பங்கீடு செய்வதற்க விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் பொதுக்கட்டமைப்புஉருவாக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பாரிய அளவிலான பிரச்சார நடவடிக்கை ஒன்றை அரசாங்கத்தின் பங்காளிக்கட்சியான ஜே.வி.பி.எடுக்கத் தீர்மானித்துள்ளது அதன் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச இதனைத் தெரிவித்துள்ளார்.

இப்பிரச்சார நடவடிக்கை கொழும்பு நகரில் ஆரம்பித்து ப்ரதான மாகாணங்களின் நகரங்களிலும் நடைபெறவுள்ளன.

பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டினால் நாட்டினுடைய அரசுரிமை, நிர்வாக அலகு என்பவற்றிற்கு ஏற்படப் போகும் ஆபத்துக்குறித்து மக்களுக்கு எடுத்துக்கூறுவதே இப்பிரச்சார நடவடிக்கையின் நோக்கம் ஆகும் .

கொழும்பில் நடைபெறவுள்ள மேதினக் கூட்டத்தில் இது ஒரு முக்கிய விடயமாக பிரச்சாரப்படுத்தப்படும் எனவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார். (32)

## பொதுக்கட்டமைப்பு பிரச்சார அறிவிப்பு; அரசின் காலம் தாழ்த்தும் ஏமாற்று யுக்தி

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(யாழ்ப்பாணம்)

ஆழிப்பேரலை பொதுக்கட்ட மைப்பை உருவாக்குவது குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஊட்டும் பிரச்சாரத்தை முன்னெடுக்கப்போவதாக ஆளும் கூட்டணியினர் தெரிவித்துள்ளமை அவர்களது இன்னுமொருகாலம் தாழ்த்தும் ஏமாற்றுயுக்தி மட் டுமே என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக ஜே.வி.பி. தனது முழுமையான எதிர்ப்பைத் தெரிவித்துள்ள நிலையில் தமது கூட்டணியிலிருந்து சிங்களப் பேரினவாதிகள் விலகிச் செல்லலாம் என்று அச்சமடைந்துள்ள சனாதிபதி சந்திரிகா அதிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக இந்த புதிய கபடயுக்தியைக் கையாண்டுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வெற்றிச்சமர்களின் நினைவு நாட்கள்; பெண்போராளிகள் மரதனோட்டம்

(அலுவலக செய்தியாளர்)

ஆனையிறவு படைத்தள வெற்றிச்சமரினையும் தீச்சுவாலை முறியடிப்புச் சமரினையும் முன்னிட்டு நான்காவது நாளாக நேற்றும் விடுதலைப் புலிகளின் சமர் அணிகளுக்கிடையிலான விளையாட்டு நிகழ்வுகள் வெகு சிறப்பாக நடைபெற்றன.

நேற்றுக் காலை 6.00 மணியளவில் புதுக்காட்டுச் சந்தியிலும், இயக்கச்சி சந்தியிலும் ஆரம்பமான விடுதலைப் புலிகளின் பெண் போராளிகளின் மரதனோட்ட அணிகள் சிறியரக மற்றும் கனரக ஆயுதங்களைத்தாங்கியவாறு முகமாலை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதி எல்லை வரை சென்றடைந்தன.

இந்நிகழ்வில் பங்குபற்றிய போராளிகளை வடபோர் முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன்,கேணல் ஜெயம், கேணல் துர்க்காஆகியோருடன் தளபதிகள், போராளிகள் பொதுமக்கள் கலந்துகொண்டு உற்சாகப் படுத்தினர். இதேவேளை இன்று விடுதலைப் புலிகளின் போர்ப்பயிற்சிப் பாசறையில் சூட்டுப்பயிற்சி போட்டியும் இடம்பெறவுள்ளது.(சதீ)



# வரிவிளம்பரம்

### சீமெந்துக் கல் விற்பனைக்கு உண்டு

எம்மிடம் தரமான சீமெந்து மணல் கலவையில் தரமான முறையில் அறுக்கப்பட்ட சீமெந்து கல் விற்பனைக்கு உண்டு. அளவு-4x6x12. தொடர்புகளுக்கு தமிழ்கடல், கட்டட பொருள் வாணிபம்,155 யாழ்சாலை கிளிநொச்சி. (5917)

### 2007 A/L உயிரியல் வகுப்புக்கள்

இடம்-கேம்பிறிச் கல்லூரி டிப்போ றோட், உதயநகர், கிளிநொச்சி, காலம்-சனி 2-3மணி,5-6மணி,ஞாயிறு-5-6 மணி, ஆசிரியர்- எம்.நேசன் B.SC (H.B), (சி.11779)

### முட்டைக்கோழி விற்பனைக்கு உண்டு

எம்மிடம் பிறிமாஇன் முட்டை கோழி (சிவப்பு) மூன்று மாதம் நிரம்பிய நிலையில் உள்ளது விலை நேரில் பேசி தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு. சுடர் கோழிவளர்ப்பகம், 155 விவேகானந்த நகர் கிளிநொச்சி. (5917)

### காணி விற்பனைக்கு

பரந்தன் முல்லைவீதி, புதுக் குடியிருப்பு தேவிபுரம் சந்தியில் இருந்து 200 மீற்றர் தொலைவில் நல்லபலன் தரும் 2 1/2 ஏக்கர் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு:- (கோடீஸ்வரன் கடை, தேவிபுரச்சந்தி. (5834)

### வேலையாள் தேவை


கிளிநொச்சி நகரத்தில் அழககம் (சலூன்)ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. வேலை தெரிந்தவர்களும், வேலை பழக விரும்புபவர்களும் வரலாம். சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும் தொடர்புகளுக்கு:- "பொதிகை அழககம்" கனகபுரம் தெரு, கிளிநொச்சி. (6072)

## கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளராய்ப் பணிபுரிந்து, முல்லை வலயக்கல்விப் பணிப்பாளராய் பணியேற்றிருக்கும் உயர் திரு.பசுபதி அரியரத்தினம் அவர்களின் சேவையைப்பாராட்டி, கிளிநொச்சி கல்விவலய உத்தியோகத்தர்களும் அதிபர்களும் இணைந்து நடாத்தும்

# பாராட்டு விழா

காலம்- 26.04.2005 செவ்வாய் ந.ப.12மணி

இடம்- கிளி/கிளிநொச்சி ம.வி.



எம் வலயம் இடர் சூழ்ந்திருந்த வேளை
பணிப்பாளனாய்ப் பொறுப்பேற்றாய்
கால நேரம் தனை மறந்து களிப்புடனே
பணிபுரிந்து எம் வலய உயர்ச்சிக்கு
இடர்பாராது உழைத்திருந்தாய்-எம்
கல்வி வளர்த்தெடுத்தாய்...
ஆழிப்பேரலை அழித்த முல்லை மண்ணை
வளர்த்தெடுக்க பெரும் பொறுப்பேற்றுள்ளாய்
நாம் பெற்ற இன்பத்தை அங்கும்பொழிந்திடுவாய்
ஏற்றமுடன் பணிதொடர
பற்றுடனே வாழ்த்துகிறோம்...

கிளிநொச்சி,
26.04.2005.

வலயக் கல்விப் பணிமனையும்,
அதிபர்களும்.

(சி.11796)

# நுண்கலைக் கல்லூரியின் சித்திரை மாத சிறப்புக் கலையரங்கு

காலம் - 26.04.2005 செவ்வாய் மாலை 5.00 மணி

இடம் - கலைபண்பாட்டு மண்டபம்-கிளிநொச்சி

## -நிகழ்ச்சிகள்-

**5.00- மணி** ஸித்தார் இசைக்கச்சேரி வழங்குபவர்-
தென்னிந்தியா-தமிழ்நாடு
பிரபல ஸித்தார் வித்துவான்.
திரு.B.சிவராம கிருஷ்ணராவ்-(ஸித்தார்)

**6.00- மணி** ஸக்சபோன் இசைக்கச்சேரி வழங்குபவர்-
தென்னிந்தியா-தமிழ்நாடு
பிரபல ஸக்சபோன்வித்துவான்.
திரு.G.ராம்நாத் (ஸக்சபோன்)

**7.00- மணி** ஸித்தார்,ஸக்சபோன் இசைச்சங்கமம்

## -அணிசெய் கலைஞர்கள்-

| | |
|---|---|
| திரு. சு. கோபிதாஸ் | வயலின் |
| திரு. க. கண்ணதாசன் | மிருதங்கம் |
| திரு. சதா.வேல்மாறன் | கடம் |
| திரு. இ. ரகுநந்தன் | கடம் |
| திரு. க. நந்தகுமார் | கெஞ்சிரா |
| திரு. க. மயூரன் | தபேலா |
| திரு. ந. சதீஸ்குமார் | முகர்சிங் |

## நிகழ்ச்சி இணை அனுசரணை:-

கொழும்பு தெற்கு, கிளி, பரந்தன்றோட்டரி கழகம்
இளம் கர்நாடக இசைக் கலைஞர் சங்கம்.

தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.
நுண்கலைக் கல்லூரியினர்.

(சி.11816)

# ஜப்பானில் கோர ரயில் விபத்து 64 பேர் பலி; பலர் படுகாயம்

(டோக்கியோ)


ஜப்பானின் மேற்குப் பகுதியிலுள்ள சுமகாசாகி பகுதியில் அதிவேக ரயில் வண்டி ஒன்று தடம் புரண்டதில் ஐம்பதுக்கு மேற்பட்டோர் உயிரிழந்தும் 400 இற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்துமுள்ளனர்.

அதிவேகமாக வந்த ரயில் வண்டி மாடிக்கட்டடம் ஒன்றில் மோதியதிலேயே இந்தப் பாரிய விபத்து ஏற்பட்டுள்ளது.

மக்கள் நடமாட்டம் அதிகமான பிரதேசத்தில் விபத்து நேர்ந்ததால் உயிரிழந்தோர் தொகை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

விபத்து நடந்த போது ரயில் வண்டியில் 500இற்கும் மேற்பட்ட பிரயாணிகள் பயணம் செய்ததாக தெரிவிக்கப்படுகிறது.

விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியாத போதும் ரயில்வே கட்டுப்பட்டுச் சபை யின் தகவலின்படி கட்டுக்கடங்காத வேகத்தில் ரயில் பயணம் செய்ததாலேயே விபத்து நேர்ந்ததாக தெரிவித்துள்ளது. ஜப்பானில் ஏற்பட்ட மிகப் பெரிய ரயில் விபத்து இதுவெனத் தெரிவிக்கப்படுகிறது.



ஜயப்பானில் சுமகாசாகி என்ற இடத்தில் நிகழ்ந்த ரயில் விபத்தை அடுத்துஅங்கு மீட்புப் பணியிலீடுபட்டுள்ள பணியாளர்கள்.

## நிலக்கரிச் சுரங்கத்தில் வெள்ளம் சீனாவில் 60 பேர் தவிப்பு

(பீஜிங்)

சீனாவின் வடகிழக்குப் பகுதியிலுள்ள நிலக்கரிச் சுரங்கம் ஒன்றில் நேற்று முன்தினம் காலை வெள்ளம் புகுந்ததில் 60 தொழிலாளர்கள் சிக்கித் தவிப்பதாக தெரிவிக்கப்படுகின்றன.

ஜிலின் மாகாணத்தில் ஜியாசிப் பகுதியில் உள்ள சுரங்கத்தில் இந்த விபத்து ஏற்பட்டதாக அந்நாட்டு அரசு அதிகாரிகள் கூறியுள்ளனர்.

## ஈராக்கில் கடத்திச் செல்லப்பட்ட பாக். தூதரக ஊழியர் விடுதலை!

(பாக்தாத்)

ஈராக்கில் தீவிரவாதிகளினால் கடத்தப்பட்ட பாகிஸ்தானிய தூதரக ஊழியர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த மாதம் ஒன்பதாம் திகதி இவர் காணாமல் போயிருந்ததாக அல்ஜசீரா தொலைக்காட்சி அறிவித்திருந்தது. இவர் கடத்தப்பட்டது அரசியல் காரணம் அல்ல கப்பம் கோரும் ஓர் நடவடிக்கை என்றே தாங்கள் நினைத்ததாக பாகிஸ்தானிய அதிகாரி ஒருவர் முன்னர் தெரிவித்திருந்தார்.

இவர் விரைவில் வீடு செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது ஈராக்கிலுள்ள தீவிரவாதிகளால் கடந்த ஆண்டு ஜூலைமாதம் கடத்தப்பட்ட இரண்டு பாகிஸ்தானியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.கடந்த காலங்களில்150 இற்கும் மேற்பட்ட வெளிநாட்டவர்கள் பணயக்கைதிகளாக கடத்தப்பட்டுள்ளனர்.

மொத்தமாக ஐயாயிரம் ஈராக்கியர்கள் கடத்தப்பட்டுள்ளதாக ஈராக்கின் மனித உரிமைகள் அமைச்சர் கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

## இத்தாலியில் புதிய சட்டம் அமுலாகிறது நாய், பூனைகளை பராமரிக்கத் தவறின் தண்டனை

(ரோம்)

இத்தாலியில் செல்லப் பிராணிகளை பராமரிக்கத் தவறினால் தண்டனை விதிக்கப்படும் எனப் புதிய சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

செல்லப் பிராணிகளான நாய், பூனை போன்றவை மீது இத்தாலிய மக்கள் மிகவும் பாசம் கொண்டவர்கள் என்றாலும், அவை பல்வேறு வகையான கொடுமைகளுக்கு ஆளாவதாக மிருகவதை தடுப்புக் குழுவினர் புகார் கூறி வருகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் ஒரு இலட்சம் நாய்களும் இரண்டு இலட்சம் பூனைகளும் அனாதைகளாக விடப்படுகின்றனவாம்.

வர்ணம் பூசுதல், வாலை வெட்டுதல் போன்றவற்றுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. செல்லப்பிராணிகளைச் சித்திரவதை செய்தால் சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்க ஏற்கனவே சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது இத்தாலியின் வடபகுதியில் இருக்கும் துரின் என்ற நகரில் நகர நிர்வாகம் புதிய சட்டம் ஒன்றைக் கொண்டு வந்துள்ளது. இதன்படி நாய் வளர்ப்போர் அதற்குத் தினமும் மூன்று வேளை நடைப்பயிற்சி கொடுக்க வேண்டும் தவறினால் சம்பந்தப்பட்டவர்களுக்கு ரூ.32 ஆயிரத்து 500 அபராதம் விதிக்கப்படுமாம்.

## லெபனானில் நிலைகொண்டிருந்த சிரியா துருப்பினர் முற்றாக வாபஸ்

(பெய்ரூட்)

லெபனானில் இருந்து சிரியா இராணுவம் முற்று முழுதாக வாபஸ் பெற்று விட்டதாக லெபனான் மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார் 29 ஆண்டுகளாக லெபனானில் சிரியா படைகள் நிலை கொண்டிருந்தன.

கிழக்கு லெபனானில் பெக்கா பள்ளத்தாக்குப் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த சிரியா இராணுவத்தினரில் பெரும் பகுதியினர் சனிக்கிழமை தங்கள் நாட்டுக்கு புறப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நூற்றுக்கணக்கான இராணுவத்தினர், பீரங்கி மற்றும் ரொக்கெட் ஏவுகணை சாதனங்களுடன் இராணுவ வண்டிகளில் சிரியா திரும்பியதாக இராணுவ அதிகாரி மேலும் தெரிவித்தார்.



நேற்று முன்தினமிரவு ஈராக் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் கதறியழுவதை படத்தில் காணலாம்.

## ஈராக்கில் தொடர் குண்டுவெடிப்பு 23 பேர் பலி; 40 பேர் படுகாயம்

(பாக்தாத்)

ஈராக்கில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற வெடி தொடர் குண்டுத் தாக்குதலில் 23 பேர் உயிரிழந் துள்ளனர் 40 பேர் படுகாயமடைந் துள்ளனர்.

கொல்லப்பட்ட வர்களில் பொலிசாரும் மசூதியில் தொழுகை நடத்திய சியா முஸ்லிம்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பாக்தாத் நகரில் உள்ள உசேனியா அல் பெய்த் மசூதி மீது கார் குண்டுத் தாக்குதலும் இதேபோல் அங்குள்ள பொலிஸ் நிலையம் மீது இரண்டு முறை தற்கொலைத் தாக்குதலும் நடத்தப்பட்டடுள்ளன.

## ஒஸ்கார் விருது பெற்ற இங்கிலாந்து நடிகர் மரணம்

1971 ஆம் ஆண்டில் ஒஸ்கார் விருது பெற்ற இங்கிலாந்து நடிகர் ஜான்மில்ஸ் ரியான்ஸ் மரணமடைந்துள்ளார்.அவருக்கு வயது 97 (டாட்டர் என்ற படத்தில் கிராமத்து முட்டாளாக நடித்ததற்காக ஒஸ்கார் விருதை இவர் பெற்றார். கடந்த ஒருமாத காலமாக உடல் நலம் இல்லாமல் இருந்த இவர் 19 வயதில் நாடக நடிகராக அறிமுகமானார். இவர் 100 படங்களுக்கு மேல் நடித்து இருக்கிறார். ஜூலியட், ஹெய்லி என்ற அவரது இரண்டு மகள்களும் வெற்றி கரமான நடிகைகள் ஆவார்கள்.



ஈராக்கின் கிர்குக்கில் நேற்று தீவிரவாதிகளின் தாக்குதலுக்குள்ளான எண்ணெய் விநியோக குழாய் தீப்பற்றி எரிவதை அவதானிக்கும் ஈராக்கிய இராணுவத்தினரும் பொதுமக்களும்.

## ஏ-380 ஜம்போ ஜெட் விமானம் இவ்வாண்டு சேவையை ஆரம்பிக்கிறது

(பரீஸ்)

உலகின் மிகப்பெரிய ஜம்போ விமானமான 'ஏ380' ரக விமானத்தின் சோதனை இயக்கம் இந்த வாரம் நடைபெறவுள்ளதாக பிரான்ஸ் அறிவித்துள்ளது.

ஐரோப்பிய கூட்டமைப்பு ஏர்பஸ் தொழில்துறை 'ஏ380' ரக மிகப் பெரிய விமானத்தைத் தயாரித்துள்ளது இரண்டு அடுக்குக் கொண்ட இந்த விமானத்தில் ஒரே நேரத்தில் 840 பயணிகள் வரை பயணம் செய்ய முடியும். இந்த விமானம் கடந்த சனவரியில் அறிமுகம் செய்யப்பட்டது. அடுத்த ஆண்டு முதல் சேவையைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளது. இந்த விமானம் தவுலசி சர்வதேச விமான நிலையத்தில் இருந்து தனது முதல் சோதனைப் பயணத்தை இந்த வாரம் தொடக்கவுள்ளது. அதற்காக இறுதிக் கட்டப்பணிகள் நடந்து வருகின்றன.

முதல் பயணத்தை வெற்றிகரமாக இயக்குவதற்காக ஆறு பேர் கொண்ட விமானிகள் குழு அறிவிகப்பட்டுள்ளது. கப்டன் கிளவுடி லீலே, ஜாக்குஸ் ரோசே ஆகிய அனுபவம் வாய்ந்த விமானிகள் தலைமையில் இந்தப் பயணம் நடைபெறவுள்ளது. இவர்கள் இருவரும் 13 ஆயிரம் மணி நேரத்திற்கும் அதிகமாக விமானத்தில் பறந்தவர்கள். 'ஏ318,ஏ340-500, ஏ340-600' உள்ளிட்ட பல விமானங்களின் சோதனை ஓட்டத்தில் பங்கெடுத்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.




நேபாளத்தில் மாவோயிட் தீவிரவாதிகளைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளநேபாள இராணுவம்.

# ஆனையிறவு வெற்றிவிழாவின் நேரடிய நிகழ்வில்...











படங்கள்:- சசிக்குமார், பிரதீபன்

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் ஓவியக் கண்காட்சி

(அலுவலக செய்தியாளர்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான ஓவியக் கண்காட்சி ஒன்று உடுத்துறை மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

மேற்படி ஓவியக்கண்காட்சியானது கிளிநொச்சி மாவட்ட



மருத்துவ சங்கத்தினரினால் ஒழுங்குபடுத்தப்பட்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட உடுத்துறை, தாளையடி, மருதங்கேணி, செம்பியன் பற்று பிரதேச பாடசாலை மாணவர்களை உள்வாங்கி மேற் கொள்ளப் பட்டது.

இந்த ஓவியக்கண்காட்சி நிகழ்விற்கு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வைத்தியகலாநிதி பிறைற்றன் தலைமை தாங்கினார். பிரதம விருந்தினராக யாழ். மருத்துவபீட மனநல மருத்துவத்துறை தலைவர் பேராசிரியர் தயாசோமசுந்தரம் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக தமிழீழ சுகாதாரசேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி விக்ரமன், கிளிநொச்சி பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் சத்தியமூர்த்தி, முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரி தர்மேந்திரா, வடமராட்சி கிழக்கு கல்வி அதிகாரி, கிளி.மாவட்ட வைத்திய அதிகாரி சதானந்தன், இரத்[illegible]ரி பொது வைத்தியசாலையின் உளநல மருத்துவ நிபுணர் டாக்டர் கடம்பநாதன் மற்றும் கிளி.மாவட்ட வைத்தியசாலை வைத்தியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ் ஓவியக்கண்காட்சியில் பங்குபற்றிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டுள்ளன. இதனை நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள் பரிசில்கள் வழங்கிக்கௌரவித்தனர். இந்த ஓவியக் கண்காட்சியின் நிறைவில் சிவதாசன் எழுதிய "நலமுடன்" என்ற நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்நிகழ்வுகளை கொழும்பு தேசிய வைத்தியசாலை மனநல



வைத்திய நிபுணர் டாக்டர் [illegible]தாசன ஒழுங்குபடுத்தினார்.

ஓவியங்களை வரைந்[illegible] மாணவர்களுக்கு வழிகாட்டியாக உடுத்துறை மகாவித்தியாலய ஆசிரியர் கரிதாஸ் செயற்பட்டிருந்தார். இந்த ஓவியக் கண்காட்சியில் வடமராட்சி கிழக்கு பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மேற்படி ஓவியக் கண்காட்சியினை கிளிநொச்சியில் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாகடாக்டர் பிறைற்றன் தெரிவித்தார். (சோ,கு)

# அறுந்து கிடந்த மின்கம்பியில் சிக்கிய மாடு பரிதாபகரமாக உயிரிழப்பு!

**-கல்மடு நகர்ப் பகுதியில் சம்பவம**

வட்டக்கச்சி கல்மடு நகர்ப் பகுதியில் மின்சாரம் தாக்கி மாடு ஒன்று பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது; மேற்படி பகுதிக்கு தனியார் மின்வழங்கல் சேவையினரால் மின்வழங்கப்பட்டு வருகின்றது. அமமின்வழங்கல் சேவையானது மரங்களின் ஊடாகவே வழங்கப்பட்டு வருகின்றது. இதன் காரணமாக இரவு வேளை மின்கம்பியின் மீது தென்னோலை விழுந்தமையால் மின் இணைப்பு அறுபட்டு கீழே விழுந்துள்ளது. இத்தென்னோலையை மாடொன்று சாப்பிட முயன்ற போது ஓலையில் சுற்றிக் கிடத்த மின் கம்பியில் பாய்சப்பட்டுக் கொண்டிருந்த மின்சாரம் தாக்கியதனால மாடு இறந்துள்ளது. வட்டக்கச்சிப் பகுதியில் பல தனி நபர்கள் மின்வழங்கல் சேவையினை சீரற்ற முறையில் நடைமுறைப் படுத்தி வருவது குறிப்பிடத்தக்கதாகும் (12)

# நெடுங்கேணி-மருதோடை வீதி மதகு உடைந்ததால் அவலம்!

**-பல மாதங்களாகியும் சீர் செய்யப்படவில்லை**

(முள்ளியவளை)

நெடுங்கேணி-மருதோடைப்பகுதி பிரதான வீதியிலுள்ள மதகு உடைந்துள்ளதால் மருதோடைக்கான போக்குவரவு தடைப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் பெரும் அவலப்பட்டு வருகினறனர். அப்பகுதி மக்கள் சார்பாக கமக்கார அமைப்பு செயலாளர் கனகரத்தினம் கருத்து தெரிவிக்கையில, மேற்படி மதகு உடைந்து போக்குவரவு மேற்கொள்ள முடியாத நிலையில் பலமாதங்களாக மக்கள் அவலப்பட்டு வருகின்றனர். குறிப்பாக மருதோடைப் பகுதிக்கு ஒரே ஒரு பேருந்து சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. இம்மதகு உடைந்ததால் அவ்விடத்துடன் பேருந்து திரும்பி விடுவதால் மருதோடையில் வசிப்போர் குறிப்பாக மாணவர்களின் பாடசாலைக்கான போக்குவரவும் விவசாயிகளின் நாளாந்த போக்குவரவும் பெரிதும் கஷ்டத்திற்குள்ளாகி வருகின்றது சம்பந்தப்பட்டவர்கள் இம்மதகை புனரமைப்புச் செய்து மக்களின் அவலத்தை தீர்க்க முன்வரவேண்டும் எனத் தெரிவித்தார். (ஆ)

# தனியார் காணியில் இயங்கும் பேருந்து நிலையத்தால் நெருக்கடி!

(மல்லாவி)

மல்லாவி பிரதேசத்திலுள்ள பேருந்து நிலையம் தனியாருக்கு சொந்தமான காணியில் இயங்கிவருவதுடன், எவ்வித அடிப்படை வசதிகள் இன்றி இருப்பதால் மக்கள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

பேருந்து நிலையத்தில் பயணிகள் தங்கும் தரிப்பிடம் மட்டுமே உள்ளது. இந்நிலையத்தில் மலசலகூடம் இல்லாமல் பயணிகள் அவதிப்படுவதை காணக் கூடியதாக உள்ளது. இதனால் இப் பேருந்து நிலையத்திற்கு அரச காணி ஒன்றினை வழங்கி பேருந்து நிலையத்தை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் கேட்டு வருகின்றனர். (24)

# ஒடுக்கப்பட்ட மக்களுக்காக வாழ்ந்த தந்தை செல்வாவின் 28ஆவது நினைவு நாள்



**தமிழர்களின்** உரிமைக்காகக் குரல் கொடுத்த தந்தை செல்வாவின் 28ஆவது நினைவு நாள் இன்றாகும். இறுதி வரை ஒடுக்கப்பட்ட மக்களுக்காக வாழ்ந்த தந்தை செல்வாவை நினைவில் கொள்வது எமது கடமை.

சட்டத்தரணிக் கல்வியை பணம் சம்பாதிக்கும் தொழிலாகக் கொள்ளாமல் மக்கள் நீதிக்காக இலட்சியப் பற்றுடன் வாழ்ந்தவர். குடியியல் வழக்குகளிலே மட்டும் தன்னை ஈடுபடுத்தி நேர்மையான வழக்கறிஞராக செயற்பட்டு நீதியை நிலை நாட்டப்பாடுபட்டவர்.

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே, பௌத்த, இந்து சமயச் சீர்திருத்தங்கள் தீவிரப் போக்கையடைந்தபோது முன்னாள் பிரதமர்கள் எஸ். டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா, ஜே.ஆர். ஜெயவர்த்தனா, டி.எஸ். சேனநாயக்கா, ரணில் விக்கிரமசிங்க போன்ற தலைவர்களின் குடும்பங்கள் அங்கிலிக்கன் திருச்சபையைவிட்டு விலகின, அல்லது இரட்டை வேடங்களைத் தாங்கின. இன்றைய சந்திரிகாவின் தந்தை எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா Why I becomela Budd ist என்ற நூலை வெளியிட்டு பௌத்தத்தை வெறிபிடித்த பௌத்தமாக்கி தன் ஒழுக்க நெறிப் பிறழ்வை வெளிப்படுத்தி பதவியைக் காப்பற்றிக் கொண்ட போது அங்கிலிக்கன் திருச்சபையின் நெறி தவறாத விசுவாசியாக தந்தை செல்வா விளங்கி, சகல இன, மத மக்களைக் கவர்ந்து சாதி, சமுக வேறுபாடுகளை ஒழிக்கும் புரட்சி வீரராய்த் திகழ்ந்தார்.

முன்னைய தமிழ்த் தலைமைகள் தமிழ் மக்களின் அபிலாசைகளை பிரதிபலிக்காது செயற்பட்டவேளை தமிழ் காங்கிரசில் இணைந்து தமிழ் சமூகத்தின் நல்வாழ்விற்காய் தன்னை அர்ப்பணித்தார். 1949இல் தமிழினத்தின் பிரிக்க முடியா அங்கமான மலையகத் தமிழர்களின் குடியுரிமை மறுக்கப்பட்டபோது அச் சமூகத்தின் நல்வாழ்விற்காய் குரல் கொடுத்தார். சமூக அநீதிக்கு துணைபோகமாட்டேன் என்ற திட சங்கற்பம் பூண்டு தான் சார்ந்த அரசியல் கட்சியைத் தூக்கியெறிந்தார். அன்றைய அரசியல் பார்வையில் அது தந்தை செல்வாவின் அரசியல் தற்கொலை என்று வர்ணிக்கப்பட்டது. ஆனால், தந்தை செல்வாவின் கூர்மையான சமூகப் பார்வை, சமூக மேம்பாட்டிற்கான அர்ப்பணிப்பு 1956இல் அவரையும் அவரது தமிழரசுக் கட்சியையும் தமிழினத்தின் ஏகப் பிரதிநிதிகளாக அன்றைய பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைத்தது. பண்டா - செல்வாவோடு ஒப்பந்தம் செய்ய வைத்தது.

தமிழர் தாயகத்திலே மிகச் சிறுபான்மையினரான அங்கிலிக்கன் திருச்சபையின் விசுவாசியாக இருந்தாலும் கத்தோலிக்கரான நல்லூர் ஈ.எம்.வி. நாகநாதன், மன்னார், வி. அழகக்கோண், யாழ். சி.எச். மாட்டின், நீர்கொழும்பு பிரான்சிஸ் பெரேரா மிக வைதீக இந்துக்களான ஊர்காவற்றுறை வி.ஏ.கந்தையா, திருமலை இராஜவரோதயா, கோப்பாய் கோமகன் வன்னியசிங்கம், மூதூர் ஏகாம்பரம், கல்குடா மாணிக்கவாசகம், உடுவில் தருமலிங்கம், பட்டிருப்பு இராஜமாணிக்கம், வட்டுக்கோட்டை அமிர்தலிங்கம், பருத்தித்துறை துரைரத்தினம், உடுப்பிட்டி ஜெயக்கொடி போன்றோரையும் சாய்மருது மசூர் மௌலான, பொத்துவில் காரியப்பர், நிந்தவூர் முஸ் தாபா, மட்டக்களப்பு சின்னலெப்பை, கல்முனை எம்.சி. அகமட், மூதூர் முகமது அலி போன்ற இஸ்லாமியர்களையும் ஒரே இலட்சியத்தில் ஒன்றிணைத்து சமய முரண்பாடுகளுக்கு முற்றுப் புள்ளிவைத்தவர். இலங்கையின் சுதந்திரத்தின் பின் முடுக்கிவிடப்பட்ட இனவிரிசல்கள், பிரதேச வேறுபாடுகள், சமயக்காழ்ப்புணர்வுகள் பற்றியெரிந்த வேளையில் தந்தை செல்வாவினால் மக்களைக் காப் பாற்ற முடிந்தது தன் நேர்மையான, உண்மையான, நீதியான வாழ்வால் சகல மதத்தலைவர்களோடும் மக்களோடும் அவர் சிறந்த உறவு நிலையை வளர்த்திருந்தார்.

1972இல் புதிய இலங்கை குடியரசு அரசியல் யாப்பினை நிராகரித்து பாராளுமன்றப் பதவியைத் துறந்தார் தந்தை செல்வா. பின்னர் ஏற்பட்ட காங்கேசன்துறைத்தொகுதி இடைத்தேர்தலில் புதிய யாப்பினை தமிழ் மக்கள் நிராகரிக்கும் ஒரு கருத்துக்கணிப்பாக வைத்து தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளரைப் பெருவெற்றி கொண்டார்.

1949இல் சமஷ்டிக்கோட்பாட்டு அரசியல் கட்சியை அவர் தோற்றுவித்தது, அவரது அரசியல் ஞானத்தையும் தீர்க்க தரிசனப் பார்வையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

எந்த வேளையிலும், பேச்சு வார்த்தைக்குத் தயாராக இருந்தார். விட்டுக்கொடுப்புக்களைச் செய்தாலும் தமிழர் தாயகக் கோட்பாட்டை இன்றைய தலைமுறைக்குச் சொத்தாக விட்டுச் சென்றார். சிங்கள பௌத்த பேரினவாதம் தமிழர்களுக்கு எதையும் கொடுக்கத் தயாரில்லை என்பதைத் தந்தை செல்வாவின் அரசியல் ஞானம்தான் உலகத்திற்கு எடுத்துக்காட்டியது.

சிங்களம் மட்டும் சட்டம் 24 மணித்தியாலங்களுள் பிரகடனப்படுத்தப்பட பாராளுமன்றத்திலும் வெளியிலும் அமைதியாகச் சாந்தமாக எதிர்த்து நின்றார். காலி முகத்திடல் சத்தியாக்கிரக போராட்டத்தில் அவரை எப்போதும் எதிர்த்த ஜி.ஜி. அவர்களே கலந்து கொள்ள வேண்டியிருந்தது. இதைத் தொடர்ந்த சிங்கள சிறி இலக்கத்த கடுகள் வாகனங்களில் பொருத்துவதை எதிர்த்தார்.

பண்டாவால் பௌத்த காடைத்தனத்திற்கு அடிபணிந்து ஒரு தலைப்பட்சமாக பின்னர் கிழித்தெறியப்பட்ட தமிழர் தாயகக் கோட்பாட்டை சிறிலங்காவின் பிரதமரால் ஒப்பந்தமாக ஏற்க வைத்தார். இதுவே இன்று விடுதலைப் போராக மாறிய தமிழர் வரலாற்று வெற்றிக்கு அடிகோலியது. 1958இன் இனக் கலவரம் தமிழர்களை அவர்களது தாயகத்திற்கு அனுப்பும் ஒரு சிங்கள நாட்டின் முயற்சி, இத்தீவில் இரண்டு தேசம் என்ற உண்மையை உலகம் ஒப்புக்கொள்ள வைத்தது.

1965இல் ஐ.தே.கட்சி மீண்டும் பலவீன அரசாக அமைந்தபோது தமிழர் அபிலாசைகளை முன்வைத்து அந்த அரசோடு ஒப்பந்தம் செய்து கொண்டார். அதுவும் 1969இல் முறிந்தது. வடக்கு-கிழக்கில் நீதிமன்றங்களில் தமிழ் நிர்வாக மொழி போன்ற விடயங்கள் அடங்கிய தமிழ் மொழி விசேட மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டபோது சிங்கள பௌத்த வெறி வெளிப்பட்டது. அப்போது தந்தை செல்வாவின் சாணக்கியத்தால் மீண்டும் பௌத்த மதகுருக்கள் தமிழர்களுக்கு எதுவும் அற்ப சொற்ப உரிமைகள் கூட கொடுக்க விடமாட்டார்கள் என்ற சான்று ஆவணப்படுத்தப்பட்டது. 1970இல் 2/3 பெரும்பான்மையுடன் பாராளுமன்றம் நுழைந்த சிறிமா தமிழர்களுக்கு என்றிருந்த 29ஆவது பாதுகாப்பு சரத்தை விலக்க சிங்கள பௌத்த குடியரசை ஏற்படுத்த கொண்டுவந்த 1972 புதிய அரசியல் யாப்பினை நிராகரித்து தீயிட்டுக் கொழுத்தி தமிழர் தேசம் சிறிலங்கா தேசத்தின் இறைமைக்கு உட்பட்டதல்ல என உலகறியச் செய்ய தனது பாராளுமன்ற பதவியைத் தூக்கியெறிந்தார். காங்கேசன்துறை இடைத்தேர்தல் நீண்ட காலமாக இழுத்தடிக்கப்பட்டு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், பதவிகள், அபிவிருத்திகள் என்றெல்லாம் நப்பாசைகாட்டப்பட்டு, தமிழினத்தின் துரோகிகளாக துரையப்பா, தியாகராசா, அருளம்பலம் உருவாக்கப்பட்டும், இடைத்தேர்தலில் தந்தை பெரும்பான்மை பலத்தில் வெற்றி கண்டார். இறுதியாக இந்த மனிதர், அமரர்கள் ஜீ.ஜீ. பொன்னம்பலம், தொண்டமான் போன்றோரின் இணக்கப்பாட்டுடன், தமிழினத்தின் எல்லோரினதும் உடன்பாட்டுடன் தமிழர் விடுதலைக்கூட்டணியை உருவாக்கி வட்டுக்கோட்டை மாகாநாட்டிலே தமிழ் ஈழப்பிரகடனத்தைச் செய்து தமிழர்கள் தங்கள் தாயகத்தைப் பெறுவதைத் தவிர வேறுவழியில்லை என்பதை எல்லோரையும் உணரவைத்தார்.

(அருட்தந்தை எம்.எக்ஸ். கருணாரட்ணம் அவர்களின் கட்டுரையிலிருந்து தொகுக்கப்பட்டது.)

## நிர்மாணிக்கப்பட்டு வரும் நீர்த்தாங்கி

(யாழ்ப்பாணம்)

யாழ். வலிகாமம் மேற்குப் பிரதேச சபை வளாகத்துள் “நீர்ப்” திட்டத்தின் கீழ் பாரிய நீர்த்தாங்கி ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

மேற்படி பிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள நீர்த்தட்டுப்பாடுள்ள பிரதேசங்களுக்கான குடிநீர் விநியோகத்தை மேற்கொள்வதற்காகவே இது நிர்மாணிக்கப்படுகிறது. (33)

## பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் சைவப் புலவர் பரீட்சை, இளம் சைவப் புலவர் பரீட்சை ஆகியவற்றில் சித்தியடைந்தோருக்கான பட்டமளிப்பு விழா இம்மாதம் 30ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ். நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக பேராசிரியர் ப. கோபாலகிருஸ்ண ஐயர் கலந்து கொள்ளவுள்ளார். (33)

## ஓய்வுபெற்ற கி.சேவகர்களைக் கொண்டு 95 வெற்றிடங்களையும் நிரப்ப நடவடிக்கை!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள கிராம சேவையாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்கள் மீண்டும் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள 435 கிராம சேவையாளர் பிரிவுகளில் 95 கிராம சேவையாளர் பிரிவுகளுக்கான கிராம சேவையாளர் பதவிகள் வெற்றிடங்களாகவுள்ளன.

இதனால், இக்கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் கிராம சேவையாளர்களூடான தமது கருமங்களை ஆற்றுவதில் எதிர்கொள்ளும் அவல நிலைமைகளைக் கவனத்தில் கொண்டே யாழ். மாவட்ட செயலகம் ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்களைப் பணியில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (33)

## கலை இலக்கியப் பெருவிழா

தேசிய கலை இலக்கியப் பெருவிழா இந்த வருடம் யாழ். மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மிகச் சிறப்பான முறையில் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதில், திறந்த போட்டிகளாக நாட்டார் பாடல், சிறுகதை, கவிதை, குறுநாடகம், சித்திரம், கட்டுரை ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் இம்மாதம் 29ஆம் திகதிக்கு முன் தத்தமது பிரதேசங்களுக்குரிய கலாச்சார உத்தியோகத்தரிடம் விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பிக்குமாறு வேண்டப்பட்டுள்ளனர். (33)

## விண்ணப்பம் கோரல்

யாழ். தென்மராட்சி கல்வி வலயத்தின் முறைசாரக் கல்வித் திட்டத்தின் கீழ் வானொலிப்பெட்டி திருத்துதல், தொலைக்காட்சிப்பெட்டி திருத்துதல் போன்ற பயிற்சிகளை பெறவிரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இப்பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்களை கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் பெற்று இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

## அராலி மேற்கில் 30 வீடுகள் ஐ.நா.அபி.திட்டம் அமைக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ். அராலி மேற்குப் பகுதியின் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 30 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

மேற்படி பிரதேசத்தில் வாழும் வறுமைப்பட்ட மக்களின் நலனைக் கருத்தில் கொண்டே இம் 30 வீடுகளும் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகள் வலிகாமம் மேற்கு பிரதேச சபையினூடாக மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. (33)

## மக்கள் மீள்குடியேறுவது குறித்து வலி வடக்கு பொது அமைப்புகள் கலந்துரையாடல்

வலி வடக்குப்பகுதியில் உள்ள உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்கள் மீளக்குடியேறுவது சம்பந்தமான கலந்துரையாடல் கடந்த சனிக்கிழமை வலி வடக்கு உதவி பிரதேச செயலாளர் எஸ். முரளிதரன் தலைமையில் பிரதேச செலயக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலைத் தொடர்ந்து வலி வடக்கு இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள பிரதேசத்தின் முழுமையான புள்ளி விபரங்களை ஆவணப் படுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. உதவிப் பிரதேச செயலாளர் தலைமையில் பதினொரு பேர் கொண்ட குழுவொன்றும் இதற்காக நியமனம் செய்யப்பட்டுள்ளது.

வலிவடக்கில் இருந்து இடம்பெயர்ந்த பல்வேறு அமைப்புக்களையும் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட அமைப்புக்கள் கலந்துகொண்டன. யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிறேமச்சந்திரன், எஸ்.சிவநேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (41)

## ஆறு மாதம் முதல் ஐந்து வயது வரையான குழந்தைகளுக்கு விற்றமின் - ஏ வழங்க யாழ்.இல் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஆறு மாதம் முதல் ஐந்து வயது வரையிலான சகல குழந்தைகளுக்கும் இலவசமாக விற்றமின் ''ஏ'' போஷாக்கு மருந்தினை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.


இம்மாதம் 30ஆம் திகதி காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரை இவ்விற்றமின் ‘ஏ’ போஷாக்கு மருந்துகள் பிரதேச ரீதியாக குழந்தைகளுக்கு வழங்கப்படவுள்ளது.

மாலைக்கண், நிரந்தர குருடு போன்ற நோய்களைத் தடுப்பதற்கான இந்த மருந்தினை சகல பெற்றோர்களும் தத்தமது பகுதிக்கான குடும்பநல உத்தியோகத்தரிடம் முற்கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

# அரசியல் வாதிகளின் ஊழலும் ஆளும் தரப்பின் தேடலும்!

**இந்திய** ஐக்கிய முற்போக்குக் கூட்டணி, எதிர்க்கட்சியான தேசிய ஜன நாயகக் கூட்டணியின் குரல் வளையில் கத்தி வைக்கும் நடவடிக்கைகளை வெகுவேக மாக முடுக்கிவிட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இவற்றின் எதிரொலியே இரு அவை களிலும் வெளித் தெரிகின்றது. அதாவது இரு அவைகளிலும், தேசிய ஜனநாயகக் கூட்டணி அமளி துமளியில் ஈடுபட்டு வருவதுடன், இந்த நடவடிக்கையினை தொடர்கதையாகத் தொடரவும் அக்கட்சி



பெர்ணான்டஸ்

முடிவு செய்துள்ளதாகவும் அறியக் கூடிய தாகவுள்ளது.

அதாவது முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணான்டஸ் மீதான பழைய சம்பவத்தை மீண்டும் விசாரணைக் குட்படுத்துமாறு மத்தியரசு அதிரடியான அறிவித்தலை வெளியிட்டிருக்கின்றது.

இதனை எதிர்த்தே தேசிய ஜனநாயகக் கூட்டணி இரு அவைகளிலும், அமளியி னால் உண்டு இல்லை எனும் நிலைமை களை உருவாக்கி வருகின்றன.

அதாவது ஜோர்ஜ் பெர்ணான்டஸ் மீது முன்பு எவ்விதமான ஊழல் விவகாரமும், இல்லையென்று பிரமாணப்பத்திரம் வாசித்த மத்தியரசே இப்போது புதிதாக ஏன் இரண்டாவது பிரமாணப் பத்திரம் சமர்ப்பிக்க வேண்டும்? அப்படியெனில் புதிய மத்தியரசு பழிவாங்கும் படலத்தை தொடங்கிவிட்டதா? என்பது தேசிய ஜனநாயக் கூட்டணியின் சார்பாக எழுந்துள்ள கேள்விக் கணையாகவுள்ளது.

அந்த வகையில் நோக்கின் மத்தியரசு, தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஆட்சியில் நடந்ததாகக் கூறி பல விவகாரங்களை தோண்டித் துருவி கையிலெடுத்திருக்கின்றது. அவை யாவும் எதிர்க் கட்சிக்கு ஆப்பு வைப்பதற்காகவே தான் என்பது காங்கிரஸ் கூட்டணி மௌனமாக முணு முணுப்ப வைகளில் ஒன்றாகும்.

இதேவேளை வெகு விரைவில் நடை பெறவுள்ள மாநிலங்களின் தேர்தல் (தமிழகம் கேரளா, மேற்குவங்கம், அஸாம், பஞ்சாப், உத்தராஞ்சல் நிமித்தமும் இரு அவைகளையும் அடிக்கடி குழப்பங்கள் மூலம் நடத்தவிடாது, வெளிநடப்பு செய்வ தாலும், இவற்றிற்கு இறுதி மணி அடிக்கும் நடவடிக்கையே இதுவாகும் என்பதும் வெளியில் கசியும் உண்மைகளாக கொள் ளப்படுகின்றன.

இந்த வகையில் மத்தியரசு தூசுதட்டி யுள்ள பிரச்சினைகளாவன.

*சவப்பெட்டி ஊழல்

*. நிலபேரஊழல்

*. தெஹல்கா ஊழல்

*.ஏ.கே 47 சர்ச்சை

*. நிலக்கரி ஊழல்

இந்தப் பட்டியலினை விசாரணைக் குட்படுத்துமாறு மத்தியரசு ஐந்து பேர் கொண்ட அதிகாரப்பூர்வமற்ற குழு வொன்றை நியமித்திருக்கின்றது. இந்தக் குழுத் தாக்குதலை ஆரம்பித்துள்ளதன் மறு வடிவமே இப்போது முளை விட்டிருக் கின்றது.

அதாவது ஜோர்ஜ் பெர்னாண்டஸ் பாது காப்பு அமைச்சராக பதவி வகித்த போது பதவியை துஷ்பிரயோகம் செய்வது போன்று நடந்து கொண்டுள்ளார் என்பதோடு கார்க்கில் போரையும் தனக்கு சார்பானதாக மாற்றிக் கொண்டிருக்கின்றார் என்பதே இந்தப் பிரச்சினையின் மையக்கருவாக இருக்கின்றது.

அந்த வகையில் இராணுவத்திற்கு ஆயுதங்கள் வாங்கிய தாகக் கூறப்பட்டதில் அரசிற்கு இரண்டாயிரம் (2000) கோடி நஷ்ரமேற்பட்டுள்ளதாகக் குற்றச் சாட்டு அரும்பியுள்ளது.

அதேபோல் கார்க்கில் போரின் போது இறந்த இந்திய வீரர்களுக்கு சவப்பெட்டி வாங்கியதில் ஊழல் செய்ததாக அன்றைய எதிர்க்கட்சி வரிசையி லிருந்த காங்கிரஸ் கோசம் எழுப்பியிருந்தது.

ஆனால் ஆளும் தேசிய ஜனநாயக் கூட்டணி ஒருவாறு சமாளித்து தலை நிமிர்ந்தது. ஆனால் இன்றும் அதே கோஷத்தை அக் கட்சி எழுப்பியிருக்கின்றது. இம் முறை மீண்டும் தலை நிமிர விடாது செயற்படுவதாகவே தேசிய ஜனநாயகக் கூட்டணியின் கலக்கம் நீடித்துள்ளது.

அதற்குக் காரணம் இல்லாம லில்லை. அன்று எதிர்க்கட்சி வரிசையிலிருந்த காங்கிரஸ் இன்று கூட்டணிகளுடன் ஆளும் கட்சியாக மாறிவிட்டிருக்கின்றமையே ஆகும்.

இந்தக் குற்றச்சாட்டின் பிரகாரம் எண்ணா யிரம் (8000) கோடி இராணுவத்திற்கு ஆயுதம் வாங்கியது தொடக்கம் சவப்பெட்டி வாங்கியது வரை நீளுகின்றது.

இத்தனை குற்றச்சாட்டுக்களையும் வழக்காக தனஞ்சய சவுகன் என்பவரே முதன் முதலில் தாக்கல் செய்திருந்தார் அப் போது. ஆனால், ஆரம்பத்தில் ஜோர்ஜ் பெர்ணான்டஸ் மீது குற்றமில்லை என்று காங்கிரஸ் கூட்டணி கூறியது என்றும் ஆனால் மீண்டும் இந்த வழக்கை துருவி ஆராய வேண்டுமென்றும் அதே கூட்டணி தான் முன்மொழிந்திருக்கின்றது என்பதும் சிந்திக்க வேண்டிய ஒன்று தான்!

ஆனால் தகுந்த ஆதாரங்களுடன் ஜோர்ஜ் பெர்ணான்டஸ் மீது கைவைப்பதில் ஆளும் கூட்டணி உஷாரடைந்து வருவதா லேயே, எதிர்க்கட்சி குட்டையினை குழப்பி மீன் பிடிக்கத் துடிக்கின்றது என்றும் பல வகை விமர்சனங்கள் தலை தூக்காம லில்லை எனலாம்.

இதேபோன்றே தேசிய ஜனநாயக் கூட்டணியின் ஆட்சியின் போது நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சர்களாக ஜக்மோகன், ஆனந்தகுமார் பதவி வகித்தனர். இவர்கள் தங்களது பதவியை போர்வையாக்கி கொண்டு விஸ்வஹிந்து பரிசட் அமைப் பிற்கு நிலத்தினை தானமாக வழங்கி யுள்ளனர் என்பதும் ஆளும் கட்சியின் மற்றொரு குற்றப் பத்திரிகையாகும்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியும் சங்கப் பரிவார அமைப்புக்களும் நகமும், சதையும் போன்றவர்கள் என்பது உலகறிந்ததொன்று சங்கப் பரிவார அமைப்பே பாரதிய ஜனதா ஆட்சிப் பீடமேறக் கைகொடுத்து தோள் கொடுத்து ஏற்றி விட்டதாக இன்றும் நம்பப் படுகின்றது.

அதனையே எதிர்க்கட்சியை நோக்கி ஆளும் கட்சி திருப்பி விட்டிருக்கின்றது. அதாவது ஒன்றல்ல, இரண்டல்ல மூவாயிரத்து நானூறு (3,400) கோடி ரூபா பெறுமதியான நிலங்களை சங்கப்பரிவாரங்களுக்கு தாரை வார்த்துள்ளதாகவே தற்போது கிளறப்பட்டி ருக்கின்ற குற்றச்சாட்டு.

இதே போன்ற காலப்பகுதியில் பாரதிய ஜனதாவின் புகழினை சரிவிற்கு கொண்டு வந்த சம்பவங்களில் முக்கியமானது தெஹல்கா இணையத்தளம் வெளியிட்ட அதிரடி உண்மைகள் தான்!

அதாவது பாதுகாப்புத் துறையினை மிக எளிதாகக் எவரும் நெருங்க முடியும், ஆயுதப் பேரத்தை நடத்த முடியும். காசை விட்டெறிந்தால் எதனையும் சாதிக்கலாம் என்பதை அந்த இணையத் தளம் வெளி யிட்டு மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தி யிருந்தது.

ஆனால், ஆளும் கட்சி அதனை பூசி மெழுகி விட்டதாக அப்போது காங்கிரஸ் குற்றம் சாட்டியிருந்தது. அதனை மீண்டும் இப்போது காங்கிரஸ் அரசு ஆராயவுள்ளது போலவே தானுள்ளது.

இதே போன்று தான் ஏ.கே 47 சர்ச்சை யையும் ஏலம் போடுவது என்பது இரண்டு வகை. ஒன்று குறைந்த தொகையிலிருந்து கூடிய தொகைக்குச் செல்வது. இன்னொன்று கூடிய தொகையிலிருந்து குறைவான தொகைக்கு நகர்வது. இதில் ஏ.கே 47 சர்ச்சை இரண்டாவது ரகத்தைச் சேர்ந்ததாகும். ஏ.கே 47 ஏலத்தில் பல்கேரிய நிறுவனம் அதிக விலை கோரியதாகவும், அதற்கே அப்போதைய பாதுகாப்புத் துறை அனுமதி வழங்கியதாகவும் குற்றச்சாட்டு வடிவமைக்கப்பட்டிருக்கின்றது.

எனவே இந்தக் குற்றச்சாட்டில் பல்கேரிய நிறுவனமும் இழுத்து விடப்பட்டி ருக்கின்ற மையானது அந் நாட்டுடன் உறவு முறையில் விரிசலை ஏற்படுத்தும் செயல் என்று எதிர்க்கட்சி மீது குற்றம் சாட்டப்படுகின்றது. இவற்றில் எது உண்மை என்பதை யார் சொல்வது...? காலம் தான்....!

அடுத்து ஆளும் கட்சி குற்றச் சாட்டிற்குள்ளாக்கி இருப்பது நிலக்கரி துறையைத் தான்! நிலக்கரி விற்பனையில் குறிப்பிட்ட நபர் (எஸ்.எஸ்.வர்மா) அதிக இலாபம் அடைந்துள்ளதாக மற்றைய குற்றச்சாட்டு.

அதாவது, நிலக்கரி விற்பனையின் போது விற்ற விலை ஒன்றாகவும், கணக்கில் காட்டிய தொகை மற்றொன்றாகவும் இருப்பதாகவே ஆளும் கட்சித் தரப்பினர் ஒன்றைக் காலில் நிற்கின்றனர்.

இதேபோல் அரிசி இறக்குமதி செய்யப்பட்ட போது ஊழல் நடந்துள்ளதாக கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் பரபரப்பாக ஐக்கிய முற்போக்குக் கூட்டணி சர்ச்சை எழுப்பியிருந்தது.


இவை மட்டுமன்றி மூத்த அமைச்சர்களில் சிலர் பொதுத்துறை பங்கு விற்பனை ஊழல் தொகை தொடர்பு துறையில் ஊழல் என்பனவும் கிளறப்படவேண்டுமென்பதிலும் எதிர்க்கட்சியை நொருக்குவதில் மும்முரம் காட்டுவதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை பழிக்குப் பழி என்பது வேண்டாமே என்பதாய் பிரதமர் பச்சை கொடி காட்ட மறுத்துள்ளார் எனவும் ஆனால் காங்கிரசில் ஒரு சாராரும், இடதுசாரிகள், ராட்சிய ஜனதாவினர் போன்றவர்களுமே எதிர்க்கட்சி மீது எப்படி எப்படியெல்லாம் விசாரணை நடத்த முடியுமோ அப்படி அப்படியே திண்டாட்டத்திற்குள் தள்ளி விட வேண்டுமென்று கொக்கிற்கு ஒன்றே மதியென்பது போன்று நிற்கின்றனர் என்றும் அரசல் புரசலாகத் தெரிய வந்திருக்கின்றன.

இவற்றின் ஆரம்பமே ஆயுதப் பேர ஊழலை விசாரணைக்குட்படுத்தவும், ஜார்ஜ் பெர்ணான்டஸ் மீது விசாரணை நடத்தலா மென்று உச்சநீதிமன்ற உத்தரவாக அமைகின்றது.

ஆளும் கட்சி தொடங்கியுள்ள அதிரடி ஆட்டம் எங்கு போய் நிற்கப் போகுமோ என்பதே எதிர்கட்சியினரின் கிலியாகக் கூட இருக்க முடியும்.

இவற்றிற்கெல்லாம் அடிப்படை, எதிர்க்கட்சி வரிசைக்கு தள்ளப்பட் டதிலிருந்து தேசிய ஜனநாயகக் கூட்டணி இரு அவைகளையும் நடத்த விட்டதில்லை.



ஆனந்தகுமார்

அதற்காக அக்கட்சியை உலுப்பி தட்டி வைப்பதற்காகவே தான் இந்த ஊழல்கள் கிளறப்பட்டிருப்பதாக காங்கிரஸ் தரப்பினர் கூறிக் கொள்கின்றனர்.

எனவே எதிர்க்கட்சியினர் மீது வீசப்பட்டுள்ள வலையானது எந்தளவு தூரம்

**அ.கலைவாணி**

ஆளும் கட்சிக்குப் பலனைக் கொடுக்கும்..? எதிர்க்கட்சி இவற்றிலிருந்து விடுபட்ட வியூகம் அமைக்காமல் இருந்து விடப் போகின்றதா? என்பவற்றிற்கு எதிர் காலத்தில் தான் பதில் இருக்கமுடியும்.

எது எப்படியோ.... எதிர்க் கட்சியின் பல் லைக் குடைய முற்படும் ஆளும் கட்சி அதன் மூலம் நாறப்போவது இந்தியா எனும் தேசம் தான் என்பதை மறந்தா போய் விடும்...! அதேவேளை ஆளும் கட்சியினர் எவரும் ஊழல் இல்லாதவர்களா..? கறைபடியா தவர்களா...? என்பதையும் ஆளும் கட்சி கூறத்தான் வேண்டும்!.



# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்



## கறுப்பு தங்கம்

கிரிக்கெட் சாதனை வீரர்களில் மேற்கிந்தியத்தீவின் பிரைன்லாறா முக்கியமானவர். அணியின் தலைவராக சாதிக்க முடியாவிட்டாலும், தனிப்பட்ட முறையில் அணிக்கு தனது பங்கை திறம்பட ஆற்றுவதில் கைதேர்ந்தவர்.

தற்போது பல பிரச்சினைகள் காரணமாக அணித் தலைவர் பதவியை இழந்து சகவீரராக ஆடிவருகிறார். ஆனாலும் அவரது சீற்றம் குறையவில்லை தென்னா பிரிக்காவுக்கு ஏதிராக இரண்டு சதங்களைப் பெற்று அசத்தினார். ஆனாலும் அணியை தோல்வியிலிருந்து காப்பாற்ற முடியவில்லை.

இந்தநிலையில் நான் சார்ந்த அணி எப்போதும் வெற்றி பெறவேண்டும் அந்த வெற்றியில் எனக்கும் பங்கிருக்க வேண்டும் இது மட்டுமே எனது இலக்கு இதை மனதில் கொண்டுதான் ஒவ்வொரு போட்டியையும் அணுகுகிறேன் என்கின்றார் லாறா. அணித்தலைவராக இல்லாது விட்டாலும் அனுபவம் வாய்ந்த வீரர் என்ற முறையில் எனக்கு நிறைய பொறுப்புக்கள் இருக்கிறது. அணித்தலைவராக இருந்தவரென்ற வகையில் புதிய அணித் தலைவருக்கு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும் எனவே அணியில் எனது பொறுப்பு குறைந்து விட்டதாக நினைக்க வில்லை. அத்துடன் அணியின் வீழ்ச்சியில் எனக்கும் பொறுப்பிருக்கிறது. அதேசமயம் எந்த அணியும் சிறிது காலம் தடுமாறுவது வழமையே. இதற்குக் காரணம் கூறவும் அவர் தவறவில்லை 1980 களில் சாதா ரண அணியாக இருந்த அவுஸ்தி ரேலியா? சாதிக்க வீல்லையா என்கிறார்.



இதற்கிடையில் இந் தியாவின் நட்சத்திர துப் பாட்ட வீரர் மனந்திறந்து சிறந்த சச்சின் டெண்டுல்கர் சாதனை பற்றி கூறும் விதம் அழகானது. அவர் மிகச் வீரர் புதிதாக கிரிக்கெட் கற்றுக் கொள்ளும் இளைஞ்கள் அவரைப்பார்த்து கற்றுக்கொள்ளலாம அவர் என்னைவிட அதிக சாதனை செய்துள்ளார் அதனை யாரும் குறைத்து மதிப்பிட முடியாது. இனிவரும் காலங்களில் அவர் இன்னும் நிறையசாதனை செய்வார். எனது நல்ல நண்பர் என்ற அடிப்படையில் சச்சின் சாதனைகளால எனக்கு பெருமை யும் கூட என்கிறார்.

1970 ஆம் ஆண்டுகளில் வீழ்த்த முடியாத அணியாகத் திகழ்ந்த மேற்கிந்தியதீவு தற்போது வெற்றிக்காக போராட வேண்டிய அணியாக மாறியுள்ளது. எனவே அனுபவம் வாய்ந்த வீர்களாக லாறா உட்பட சிலரையே கொண்டுள்ள மேற்கிந்தியதீவு லாறாவின் காலத்திலேயே அசைக்கமுடியாத அணியாக விஸ்வரூபம் பெறுமா என்பதே தற்போது ரசிகர் களின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

## விடை பெறுகிறார் ஷெப்பேட்

குண்டு உடம்பு... வெள்ளை முகம்..."உதட்டில் லேசான புன்னகை நடுவர் என்றால் இத்தனை அம்சங்களையும் கொண்ட டேவிட் ஷெப்பேட் தான் ரசிகர்களின் ஞாகபத்திற்கு வருவார். இங்கிலாந்தைச் சேர்ந்த இவர் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் மேற்கிந்தியத் தீவு தொடருடன் நடுவர் வாழ்க்கையிலிருந்து விடை பெற்றுக் கொள்கிறார்.

கடந்த மார்ச்சில் நடந்த அவுஸ்திரேலியா நியூசிலாந்துடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியுடன் அவர் அதிகாரபூர்வமாக ஓய்வு பெற்று விட்டார். எனினும் 65 வயது நிறைவு பெற இன்னும் சில மாதங்கள் இருப்பதால் மேற்கிந்தியத் தீவு தொடருடன் அவரது பணி நிறைவடைகிறது.

பாகிஸ்தான் இலங்கை அணிகளுக்கு இடையிலான 1983 உலகக் கோப்பை போட்டியில் நடுவராக அறிமுகமான ஷெப்பேட் அன்று முதல் தற்போது வரை கிரிக்கெட் உலகில் பல மாற்றங்களைப் பார்த்தவர். தொழில் ரீதியான விளையாட்டாக வளர்ந்தது. தடையில் இருந்து தென் ஆபிரிக்கா மீண்டும் களத்தில் நுழைந்தது.சிம்பாப்வே மற்றும் வங்கதேசஅணிகள் டெஸ்ட் அந்தஸ்தைப் பெற்றது எல்லாம் இந்தக் காலகட்டத்தில் தான். வியக்க வைத்த சாதனைகள், சர்ச்சைகள், சண்டைகள், சூதாட்டம் என்று ஓய்வு பெற்ற பின் அசை போடுவதற்கும் புத்தகங்கள் எழுதிக் குவிப்பதற்கும், எத்தனையோ விடயங்கள் அவருக்கு இருக்கின்றன.

87 டெஸ்ட் போட்டிகள், 165 ஒரு நாள் போட்டிகள் என்று ஷெப்பேட் நடுவராக நின்றிருக்கிறார். கடந்த ஆறு உலகக் கோப்பை போட்டிகளும் இவர் இல்லாமலா? அவற்றில் மூன்று இறுதிப் போட்டிகளுக்கு இவர் தான் நடுவர்.

தூஸ்ரா சர்ச்சையில் அவர் பெரிதாக விமர்சிக்கப்படவில்லை. ஆனால் 15 டிகிரி சட்டம் பற்றியும் அவர் பெரிதாக விளக்கம் அளிக்கவில்லை. முத்தையா முரளிதரன் பந்து வீச்சில் மட்டும் பிற மேற்கத்தியர்களின் கருத்துக்கு ஏற்ப இவரது கருத்து இருந்தது. அவர் நல்ல பந்து வீச்சாளர் சந்தேகமயைக் கொண்டு பிறகென்ன பாட்ட வீரர்களில் வீச்சில் பிரட்லீயும் கவர்ந்தவர்கள் கடந்த

தான் அவரது சிறப்பான பந்து வீச்சில் கொஞ்சம் இருக்கிறது. எத்தனை டிகிரிக்கு மேல் பிரச்சினை போகலாம் என்ற விதி தான் இப்போது இருக்கிறதே.. என்கிறார் ஷெப்பேட். இதுவரை அவர் பார்த்த துடுப் சிறந்தவர் விவியன் ரிச்சர்ட்ஸ் என்கிறார். வேகப்பந்து சுழற்பந்து வீச்சில் ஷேன்வோர்னும் தன்னைக் என்கிறார்.



22 ஆண்டுகளில் கிரிக்கெட் பார்த்தவர்கள் யாரும் ஷெப்பேட்டை மறக்க முடியாது. காலம் அவருக்கு 'அவுட்' கொடுத்து விட்டது. ஆனாலும் மைதானத்தில் தனது எல்லைக்குள் பெரிய ராஜ்யத்தை நடத்தியவர் என்பதை மறுக்க முடியாது.


## பெயர் சொல்லும் ஆசான்கள்

ஒரு அணி சாதிக்கின்றது என்றால் அதற்குப் பின்னால் மிகப்பெரிய பலம் ஒன்று நிச்சயம் இருந்தே ஆக வேண்டும். இந்தவகையில் விளையாட்டு அணி ஒன்றை எடுத்துக்கொண்டால் அதன்பின்னால் பயிற்சியாளர் எனும் பலம் அதன் முன்னேற்றப் பாதையில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

இவர்களில் இந்தியக்கிரிக்கெட் அணிக்கு பயிற்சியாளராக இருந்து அண்மையில் நிறைவுற்ற பாகிஸ்தான் இந்தியத் தொடருடன் ஓய்வுபெற்ற ஜோன்ரைட், சிறிலங்கா அணியை உலகக் கிண்ணத்தை கைப்பற்றும் நிலைக்கு உயர்த்தியவரும் (1996)தற்போது பங்களாதேஷ் அணியை அதன் பாதையில் வழி நடத்திச்செல்பவருமான வட்மோர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களில் ஒருவர் ஓய்வு பெறுகிறார். மற்றவர் பணியை நீடித்துள்ளார்.

நியூசிலாந்தை தாயகமாகக் கொண்ட ஜோன்ரைட் இந்திய அணிக்கு கிடைத்த மிகச்சிறந்த பயிற்சியாளர். இந்திய அணியின் அண்மைய மகத்தான வெற்றிகளுக்கு இவர்காரணமாக இருந்தார். 2000ஆம் ஆண்டு இந்திய பயிற்சியாளராக நியமனம்பெற்ற ரைட் ஐந்தாண்டுகால சேவையை திறம்பட நிறைவு செய்துள்ளார்

தொடர்ச்சியான வெற்றிகளை பெற்று வந்த அவுஸ் திரேலிய அணிக்கு 2001 ஆம் ஆண்டு கடிவாளம் போட்டு இந்திய அணிநிறுத்தியது. இதற்கு ஜோன்ரைட்டின் பங்கு முக்கியமானது இதனைவிட உலகக்கிண்ணத் தொடரில் இறுதிவரை முன்னேறியது. பாகிஸ்தான் அணியை அவர்கள் மண்ணில் வைத்து வீழ்த்தியது என்றால் இவரது பங்கு மகத்தானது. இப்படியாக நிறையச் சாதித்தாலும் அவர் சந்தித்த கடைசிப் போட்டி ஏமாற்றமாக அமைந்து விட்டது வருந்தத்தக்கதே. இதேவேளை வெற்றிக்காக ஏங்கிய பங்களாதேஷ் அணிக்கு பயிற்சியாளர் பொறுப்பேற்ற கொழும்பில் பிறந்த அவுஸ்திரேலியரான வட்மோர் பங்களாதேஷ் அணியில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை கொண்டு வந்தார் என்பதை கிரிக்கெட் உலகம் மறந்து விடமுடியாது.



அந்த வகையில் இந்தியாவுடன் சிட்டகொங்கில் நடைபெற்ற ஒரு நாள் போட்டி ஒன்றை வென்று வரலாறு படைத்ததையும் இந்த வருட ஆரம்பத்தில் சிம்பாப்வேயுடனான டெஸ்ட் தொடரை ஒன்றுக்கு பூச்சியம் என்றகணக்கில் வெற்றி பெற்றதையும் குறிப்பிடலாம்.

எனினும் தனது ஒப்பந்த காலம் முடிந்தும் மேலும் இரு வருடங்களுக்கு ஒப்பந்தத்தை நீடித்துள்ள பயிற்றுநர் வட்மோர் அவ்வணி வீரர்களை மேலும் திறமைமிக்கவர்களாக உருவாக்கப்போவதாக கங்கணம்கட்டியுள்ளார். அவர் பயிற்றுவிப்பாளராக வரும் முன்பு பங்களாதேஷ் அணி போட்டிகளில் கடுமையாக போராட வேண்டியிருந்தது. எனினும் ஐந்து வருடங்களில் அந்த நிலையில் பாரிய மாற்றத்தை அவர் கொண்டு வந்துள்ளார். இதனை அவர் மேலும் விருத்தியடையச்செய்ய இரு வருடங்கள் பயிற்சியளிக்கவிரும்பி ஒப்பந்தத்தை நீடித்துள்ளார் போன்று தெரிகின்றது. முதலில் அவர் எதிர் பார்த்ததை விட வீரர்கள் முன்னேற்றம் கண்டிருப்பதை அவர் உறுதிப்படுத்தியுள்ளார். சரியான வழியில் அவர்கள் பயிற்சியிலீடுபட்டால் மேலும் முன்னேறலாம் எனவும் முன்னேற்றத்திற்கு கொண்டு வரமுடியும் என்பதையும் அவர் நம்புகின்றார்.

பங்களாதேஷ் அணி அடுத்த மாதம் இங்கிலாந்துக்கு பயணம் மேற்கொண்டு அந்நாட்டு அணியுடன் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கு கொள்வதுடன் உலக சம்பியனான அவுஸ்திரேலியஅணி பங்கு கொள்ளும் நட்வெஸ்ட் கிண்ணத்திற்கான முக்கோண ஒரு நாள் போட்டித்தொடரிலும் பங்கு பற்றவுள்ளது. எனவே அந்தப் போட்டித்தொடர் பங்களாதேஷ் அணிக்கு பெரும் சவாலானதும் கடினமானதுமாகும்.எனினும் எதிரணிக்கு மிகவும் நெருக்கடியை ஏற்படுத்தும் அளவுக்கு பங்களாதேஷ் அணியை பயிற்றுவிப்பது என வட்மோர் தெரிவித்துள்ளார். எனவே டெஸ்ட் போட்டி ஒன்றை சமன்செய்தும் ஒருநாள் போட்டி ஒன்றை பங்களாதேஷ் வெற்றிபெற்றாலே வட்மோரின் இலக்கு வெகுதூரத்தில் இருக்காது. இப்போட்டியின் போது பங்களாதேஷ் வீரர்கள் முன்னர் செய்த தவறை மீண்டும் செய்யாமலிருக்குமாறு பார்த்துக் கொள்வதும் தனிப்பட்ட திறனை வெளிப்படுத்தச் செய்வதுமே தனது பணியாகக் கொண்டுள்ளார் வட்மோர். அவரின் எதிர்ப்பார்ப்பை பங்களாதேஷ் வீரர்கள் நிறைவேற்றுவார்களா என்பது அடுத்த மாதம் தெரியவரும்



## புதுப்புது முகங்கள்

டென்னிஸ் உலகில் ஒரு காலத்தில் ஜோன் மைக்கன்ரோ, நவரதலோவா ஸ்ரீட்ராம் பிரஸ். ஸ்டெபிக்கிராப் போன்றோர் அசைக்க முடியாதவர்களாக கொடி கட்டிப் பறந்தனர்.

இன்று அந்த நிலை மாறி நாளுக்கு நாள் புது முகங்களின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது இதில் ஆடவர் மகளிர் என்ற வேறுபாடின்றி வலுப்பெற்றுள்ளமை டென்னிசின் முக்கியத்துவம் மேற்கத்தைய நாடுகளில் எந்தளவுக்கு உயர்வாக உள்ளது என்பதைக் காண முடிகின்றது.

இவர்களில் அதிகமானோர் பெல்ஜியம், ரஷ்யா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா சுவீடன் நாடுகளிலிருந்து வெளிவருகின்றனர்.

இவர்கள் வந்த வேகத்தில் முன்னணி வீரர்கள் அதிர்ச்சித் தோல்விக்கு உட்படுத்துவது தான் சிறப்பம்சமாகவுள்ளது.

இதனால் எந்த ஒரு வீரரும் டென்னிஸ் உலகில் முன்னணி வீரர் என நிலைத்திருப்பது தற்போது கடினமான ஒன்றாகவே இருந்து வருகின்றது.

தற்போது சுவிர்சர்லாந்தின் ரோஜர் பெரடரே அதிக தொடர் வெற்றிகளைப் பெற்று முன்னணி வீரராகத் திகழ்கிறார். இவரும் அண்மையில் தோல்விகளைச் சந்திக்கும் அளவுக்கு புதுமுகங்களின் ஆதிக்கம் அமைந்துள்ளது.

இந்த வரிசையில் இந்தியாவைப் பிரநிதித்துவப்படுத்தும் சானியா மிர்சாவும் ஒருவர்

இவர் ஹைதரபாத்தில் நடைபெற்ற ஓப்பன் டென்னிஸ் போட்டியில் சம்பியன் பட்டம் வென்று அதிர்ச்சி அளித்தார். டபிள்யூ.டீ.ஏ அந்தஸ்து பெற்ற முதல் இந்திய வீராங்கனை யான சானியாவுக்கு பிரான்சில் நடைபெறவுள்ள பாரிஸ் ஓபன் டென்னிஸ் சவாலாக அமைந்துள்ளது.

இதில் இவர் வெற்றி பெறுகின்றாரோ இல்லையோ மேலும் புது முகங்கள் சாதிப்பதற்கே அதிக வாய்ப்பு உள்ளது. ஏனெனில் டென்னிஸ் அனுபவம் என்பதற்கு அப்பால் உடற் தகுதியே பிரதான பங்கு வகிக்கின்றது.

# சீமெந்து, பெற்றோல், பற்றரி எடுத்துச் செல்ல கட்டைபறிச்சானில் சிறிலங்கா இராணுவம் தடை!

## -பொதுமக்கள் புலிகளிடம் முறைப்பாடு

திருகோணமலை கட்டைபறிச்சான் சிறிலங்கா இராணுவ சோதனைச் சாவடி ஊடாக விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதிகளுக்கு சீமெந்து மற்றும் கொள்கலன்களில் பெற்றோல் எடுத்துச் செல்வதற்கு இராணுவத்தினர் தடை விதித்துள்ளனர். இத்தடை நேற்று முன்தினம் தொடக்கம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இச்சோதனைச் சாவடி ஊடாக மின்கலங்களை எடுத்துச் செல்வதற்கும், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து எடுத்து வரு வதற்கும் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

சிறிலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே 2002 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு பொருட்கள் கொண்டு செல்வதற்கு எவ்வித தடைகளும் விதிக்கப்பட்டிருக்கவில்லை.

ஆனால் அண்மைக்காலமாக இவ் உடன்படிக்கையை மீறும் வகையில் திருகோணமலை கட்டைபறிச்சான் இரா ணுவ முகாம் இராணுவத்தினர் தடைகளை ஏற்படுத்தியிருப் பது பொதுமக்களுக்கு பெரும் அசௌகரியங்களை ஏற்படுத் தியுள்ளது. இது விடயமாக பொதுமக்கள் விடுதலைப் புலிகளின் கவனத்திற்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையிலான கட்டுப்பாட்டுப் பகுதிக்கான எல்லைகளாக கட்டைபறிச்சான், மகிந்தபுரம் ஆகிய இராணுவ முகாம்கள் விளங்குகின்றன.

மகிந்தபுரத்தில் இவ்வாறான நடவடிக்கைகள் நடைபெறுவதில்லை. ஆனால் கட்டைபறிச்சான் சோதனைச் சாவடி ஊடாக இப்பொருட்களை எடுத்துச் செல்வதற்கு தடைகள் விதிக்கப்பட்டுள்ளமையானது ஒரு போர் நிறுத்த மீறல் என விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் திருகோணமலை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினருக்கு அறிக்கை ஒன்றினை சமர்ப்பித்துள்ளனர்.

இராணுவத்தினரின் இச்செயற்பட்டினால் கட்டைபறிச்சான் இராணுவ முகாம் சிறிலங்கா இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள்ளும், சிறிலங்கா அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள்ளும் இல்லாத தோற்றத்தைக் காட்டுவதாக பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

# ஆழிப்பேரலை நிவாரணத்தை பகிர பொதுக்கட்டமைப்பு அவசியமில்லை

## - பேரியல் அஷ்ரப் கருத்து

(கொழும்பு)

ஆழிப்பேரலை நிவாரணத்தைப் பகிர்ந்து பயன்படுத்திக்கொள்ள பொதுக்கட்டமைப்பு ஒன்று அவசிய மில்லை என ஆளும் கூட்டணியிலுள்ள பேரியல் அஷ்ரப் திடீரென தலைகீழான கருத்தை வெளியிட்டுள்ளமை அரசியல் அரங்கில் பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம் களுக்கும் சமபங்கு வழங்கப்பட வேண்டுமென முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அழுத்தம் கொடுத்து வருவதால், முஸ்லிம் கிராமங்களில் மீண்டும் ஹக்கீமுக்கு செல்வாக்கு அதிகரித்து வருவதை அவதானித்த பேரியல் அஷ்ரப், தனது முன்னைய நிலைப்பாட்டி லிருந்து விலகி, இவ்வாறு தெரி வித்துள்ளதாக அவதானிகள் கருத் துக் கூறியுள்ளனர்.

தேர்தலொன்று அறிவிக்கப் படலாம் என்று பரவலாக எதிர் பார்ப்புக்கள் அதிகரித்துவரும் நிலையில், பேரியல் அஷ்ரப் கட்சி யான தேசிய ஐக்கிய முன்னணி யிலுள்ள முஸ்லிம் உறுப்பினர்கள் மீண்டும் முஸ்லிம் காங்கிரசிற்குக் கட்சி தாவுவது குறித்து ஆலோ சிப்பதாகவும், ரவூப் ஹக்கீமுடன் இரகசியத் தொடர்புகளை மூன்றாம் நிலைத் தரகர்களூடாக ஆரம்பித் துள்ளதாகவும் இரகசியத் தகவல் கள் கசிந்துள்ள நிலையில், இதைத் தடுக்கும் முகமாக பேரியல் அஷ்ரப் இந்த அதிரடி அறிவிப்பை விடுத் துள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# சத்திரசிகிச்சை நிபுணர் வெற்றிடம் நிரப்பல்

(மன்னார்)

மன்னார் பொது வைத்தியசா லையில் நீண்டகாலமாக நிலவி வந்த சத்திரசிகிச்சை நிபுணரின் வெற்றிடம் நிரப்பட்டுள்ளது. டாக்டர் முருகரத்தினம் என்பவர் நியமனம் பெற்று இதற்கான கடமைகளை பொறுப்பேற்றுள் ளார். இதனால் வவுனியா, அனுராதபுரம் போன்ற இடங்க ளுக்கு நோயாளர்களை அனுப்பி வைத்த அவலம் நீக்கப்பட்டுள்ளது. (18)

# ஆளும் கூட்டணிக்குள் முரண்பாடுகளில்லை ஐ.தே.கட்சி வீணாக வதந்தி பரப்புகின்றது!

## –சிறிலங்கா சுதந்திரக்கட்சி பொதுச்செயலர் கூறுகிறார்

ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் இரு பிரதான கட்சிகளான சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பி.யும் தங்களுக்குள் முரண்பட்டுள்ளதாகவும், விரைவில் முறிந்துவிடும் நிலைக்கு வந்துள்ளதாகவும் ஐ.தே.க. வதந்தி பரப்புகிறதேயொழிய, உண்மை அதுவல்ல என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரி வித்துள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, புதிதாக எடுக்கவுள்ள அடுத்தகட்ட நடவடிக்கைகளைப் பார்த்து அனைவரும் அதிசயிக்கப் போகிறார்கள். எமது கூட்டணிக்குள் எந்தப் பிளவும் இல்லை. ஐ.தே.க. வேண்டுமென்றே வதந்திகளைப்பரப்பி, எமது கூட்டணிக்குள் குழப்பங்களை உருவாக்கிவருகிறது என்று அவர் குற்றம் சாட்டியுள்ளார். அரசாங்கத்திற்குள் குழப்பங்களை உருவாக்குவதற்கான பரப்புரைகளை முன்னெடுக்கும் ஊடகங்களுக்கெதிராக அரசு கடும் நடவடிக்கைகளை எடுக்கவுள்ளது என்று தெரிவித்துள்ள மைத்திரிபால சிறிசேன, தங்கள் கட்சி தொடர்ந்தும் பலமான நிலையிலேயே இருந்து வருவதாகவும், விரைவில் பொதுக்கட்டமைப்பு, நாட்டின் இனப்பிரச்சினைக்கான தீர்வு ஆகிய இரு முக்கிய விடயங்களிலும் அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அறிவிக்கவுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். சுதந்திரக்கட்சியிலிருந்து ஏராளமான அரசியல் குழப்பங்களை உருவாக்கிய பின்னர், தற்போது கட்சிதாவி ஐ.தே.முன்னணியில் அங்கம் வகிக்கும் விரிவுரையாளர், சுதந்திரக் கட்சி பற்றி பல தவறான கருத்துக்களைப் பரப்பி வருகிறார் என்று ஜீ.எல்.பீரிஸைக் கடிந்துகொண்ட மைத்திரி பால, அவருடைய பிரச்சாரம் தவறானது என்பதை விரைவில் மக்கள் புரிந்து கொள்வார்கள் என்றும் குறிப்பிட்டார்.

# சுதந்திரக்கட்சியின் நடவடிக்கைகள் மே தினத்தின் பின்னர் மாற்றியமைப்பு

(கொழும்பு)

எதிர்வரும் மேதினத்தின் பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனது கட்சி நடவடிக்கைகளை மாற்றியமைக்கவுள்ளதாக கொழும்புச்செய்திகள் தெரிவிக்கின்றன. இதன் அடிப்படையில் அந்தக்கட்சி தொகுதிகள் தோறும் புதிய அங்கத்தவர்களை சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கவுள்ளது.

அதேநேரம் ஜே.வி.பியின் செல்வாக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணிக்குள் பெருகிவருவதை தடுக்கும் முயற்சிகளிலும் அது ஈடுபட வுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# தனியார் பேருந்துக்கு எரியூட்டிய சந்தேக நபர்கள் கைது!

(கொழும்பு)

கந்தனையில் தனியார் பேருந்து எரியூட்டப்பட்டமை தொடர்பிலான சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து நேற்று முன்தினம் நாடு முழுவதும் சேவைப் புறக் கணிப்பில் ஈடுபடவிருந்த தனியார் துறை போக்குவரத்துத் துறையினர் அதனை விலக்கிக் கொண்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சம்பவம் ஒன்றின் போது முச்சக்கரவண்டியில் பயணித்தவர்கள் தனியார் பேருந்தை எரியூட்டினர். இதன் போது அதில் இருந்த பேருந்தின் நடத்துநரும் எரியுண்டு மரணமானார். இதனையடுத்து அந்த வீதியின் தனியார் போக்குவரத்துச் சேவையினர் சேவைப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வந்தன.

அத்துடன் நேற்று முதல் நாடளாவிய ரீதியில் சேவை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாகவும் எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (32)


தமிழீழ வைப்பகம்

பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியானவர் களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

பணிநிலை:- உத்தியோக உதவியாளர் தரம் -03

தகைமைகள்: க.பொ.த.(சாதாரண தர)தேர்வில் கணிதம் 42/ கணிதம் II, தமிழ் உட்பட 05 திறமைச் சித்தியுடன் குறைந்தது 06 பாடங்களில் ஒரே அமர்வில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன், க.பொ.த (உயர்தர) தேர்வில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

மாதாந்த ஊதிய அளவுத்திட்டம்:- 3,670-5,070 / 70X20 6,000

அகவை எல்லை:- 19-25 ஆண்டுகள்

வேண்டுகைகள் யாவும் உரிய படிவத்தில் நிறைவு செய்யப்பட்டு கடித உறையின் இடப்பக்க மேல்மூலையில் "**ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை–உத்தியோக உதவியாளர் தரம்–03**" எனக் குறிப்பிடப்பட்டு 2005.05.31 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பாகக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். வேண்டுகைப் படிவங்களையும், மேலதிக விளக்கங்களையும் தமிழீழ வைப்பகத்தின் எல்லாக் கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

தமிழீழ வைப்பகம் BANK OF TAMILEELAM

மனிதவள மேலாளர்,
மனிதவளப்பகுதி,
நடுவப் பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

குறிப்பு:- * முழுமையாக நிறைவு செய்யப்படாத, சான்றிதழ்கள் இணைக்கப்படாத வேண்டுகைகள் நிராகரிக்கப்படும்.

* நிறைவு செய்யப்பட்ட வேண்டுகைகளை பதிவுத்தபாலில் (மனிதவள மேலாளர், **மனிதவளப்பகுதி, நடுவப்பணியகம், தமிழீழ வைப்பகம், யாழ்சாலை, கரடிப்போக்கு, கிளிநொச்சி.** எனும் முகவரிக்கு) நேரடியாகவோ அல்லது தமிழீழ வைப்பகக் கிளைகளினூடாகவோ அனுப்பி வைக்கலாம்.

(சி.11808)

# நடுநிலை வகிக்கும் இயக்கமே உலகின் வலுவான சக்தி!

**- இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்**

நடு நிலை வகிக்கும் இயக்கமே உலகின் வலுவான சக்தி என இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள்ளார்.

இந்தோனேசியாவில் நடைபெற்ற ஆசிய ஆபிரிக்காவைச் சேர்ந்த 106 நாடுகளின் தலைவர்கள் பங்குபற்றிய மாநாட்டின் இறுதி நாள் நிகழ்வில் பேசும் போதே மன்மோகன்சிங் மேற்படி கருத்தைத் தெரிவித்துள்ளார்.

நியாயமான நேர்மையான, உலக நியதியை உருவாக்குவதற்கு நடுநிலைமை வகிக்கும் நாடுகளைக் கொண்ட இயக்கமே வலிமை கொண்ட சக்தியாக விளங்கமுடியும். ஏழை நாடுகளின் மக்களது அபிலாசைகளை பூர்த்தி செய்வதற்கு உலகளாவிய வர்த்தக முறை மேலும் ஊக்கப்படுத்தப்படவும் தற்போது இருக்கும் உலகளாவிய சவால்களை எதிர்கொள்ளவும் நடுநிலை நாடுகளின் இயக்கம் தான் சரியான சக்தி வாய்ந்த கருவியாக விளங்க முடியும்

கடந்த காலங்களிலும் இது சிறப்பாகச் செயற்பட்டிருக்கிறது. என்பது மறுக்க முடியாத உண்மை தான். சர்வதேச அமைப்புக்கள் சனநாயக முறையில் செயற்பட்டு அனைத்து மக்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கிறதா என்பதை ஆசிய, ஆபிரிக்க நாடுகள் உறுதி செய்து கொள்ள வேண்டும் அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையும் அதன் சிறப்பு நிறுவனங்களும், சர்வதேச நிதி நிறுவனங்கள் போன்றவையும் சீரமைக்கப்பட வேண்டும்.

வளர்ந்து வரும் நாடுகள் இடையேயான ஒத்துழைப்பு இன்னும் பல மடங்கு அதிகரிக்க வேண்டும் இதனால் சிறந்த ஒற்றுமையை நமக்குத் தருவதோடு நம்மை எதிர்நோக்கியுள்ள அடிப்படைப்பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளுவதற்கான பொருத்தமான தொழில்நுட்பங்களையும் பெறமுடியும். அதேவேளை உலகமயமாக்கலுடன் நாம் சேர்ந்து செல்லாவிட்டால் இப்படியான பயன்பாடுகளைப் பெற முடியாது எனவும் தமது உரையிலே அவர் குறிப்பிட்டார்.

---

## குரங்கு மலிந்த பிரதேசம்

ஆந்திர மாநிலத்தின் ஹைதராபாத்துக்கு அண்மையில் உள்ள டாருவ் பகுதிகளில் 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட குரங்குகள் கூட்டமாகச் சென்று அங்குள்ள விவசாய நிலங்களில் உள்ள பயிர்களை நாசப்படுத்தி விவசாயிகளுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன. அது மட்டுமல்லாது நேற்று முன்தினம் மக்களின் வீடுகளுக்குள் புகுந்து மின்பாவனைப் பொருட்கள் உட்படப் பல வீட்டுப்பாவனைப் பொருட்களை உடைத்து நொருக்கி சுமார் 4 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களுக்குச் சேதம் விளைவித்துள்ளன.

## தவறிவிட்டது

24.04.2005 ஆம் திகதி பாரதிபுரத்திற்கும் கிளிநொச்சிக்கும் இடையில் எனது தேசிய அடையாள அட்டையும் சாரதி அனுமதிப்பத்திரமும் நிரந்தர பயண அட்டையும் (பாஸ்) 10000 ரூபா பணமும் தவறவிடப்பட்டுள்ளது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் அறிவமுது பொத்தக சாலையில் ஒப்படைத்துதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன் சன்மானம் வழங்கப்படும் இ.ஜீவாகரன். (6078)

## சாருஷனின் 2ஆவது பிறந்தநாள் வாழ்த்தும் நாலவரின் நான்காம் மாத நினைவலைகளும்

கடந்த 26.12.2004 அன்று நினைவழியாத இயற்கை அன்னை சுனாமி எனும் சீற்றத்தால் முல்லைக் கடலில் சங்கமமான எங்களது இதயங்கள்.



த.சாருஷன்



த.கெனிசிகா



த.ஜனோதினி



த.நாச்சிறி

அன்னையின் மடியில்:-

| த.சாருஷன் | த.கெனிசிகா | த.ஜனோதினி | த.நாச்சிறி |
|---|---|---|---|
| 26.04.2003 | 06.09.1999 | 05.09.1995 | 13.07.1971 |

கடலின்மடியில்:- 26.12.2004

மண்ணில் பிறந்த யாவரும் மண்ணுக்கேதான் — சொந்தம்
இல்லையென்று கூறவில்லை — நாம்
பாதியினில் பறிப்பது தான் நீதியென்றால்
மானிடப்பிறவி வேண்டவே வேண்டாம்.

இவர்களின் பிரிவால் வாடிநிற்கும்
கணவன்,தந்தை,மகள்,
சகோதரி மற்றும் உற்றார்,
உறவினர்கள்,நண்பர்கள்.

நாலவரின் நினைவான சமாதி 26.04.2005
பி.ப. 4.00 மணிஇன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

தகவல்:-
தாசன்.

(சி.11797)

# பதவி வெற்றிடம்

**வவுனியா மாவட்ட கால் நடை வளர்ப்பாளர்**
**கூட்டுறவுச் சங்கம் வவுனியா**

பதிவு இல.வ/ 271

**பதவி:- பொதுமுகாமையாளர் - 101 - 11 எண்ணிக்கை - 01**

**சம்பள அளவுத்திட்டம்:- 54,000 - 1080x10, 1200X10 - 75,000/=**
கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சுற்று நிருபங்களுக்கு அமைய ஏனைய படிகளும்,

**கல்வித்தகைமைகள்:-**
(அ) கூட்டுறவுப் பணியாளர் 12 ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்ட பதவியில் 03 வருடத்துக்கு குறையாத அனுபவம் அல்லது 13ஆவது சம்பள அளவுத்திட்டத்திலான பதவியில் 06 வருட அனுபவம்.
(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் அல்லது அதற்கிணையான தகைமை.
(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (உயர்தரம்) க.பொ.த. (உயர்தரம்) 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில் நுட்ப ஸ்தாபனமொன்றில் முகாமை/மேற்பார்வை மட்ட பதவியில் 01 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

**பிணை விபரம்:-** ரொக்கம் 10,000/= ஆதனம் 50,000

**வயதெல்லை:- 20 - 45**

**பதவி:- கணக்கு எழுதுநர் - 302 - 12 எண்ணிக்கை 01**
**சம்பள அளவுத்திட்டம்:- 51,000 - 960X 10, 1080X10 - 71,000**
கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சுற்று நிருபங்களுக்கு அமைய ஏனைய படிகளும்.

**கல்வித்தகைமைகள்:-**

பதவியில் 04 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.
(ஆ) ஐக்கிய இராச்சியத்தில் இடைநிலை கணக்குப் பதிவாளர் பரீட்சையில் சித்தி.
(இ) கூட்டுறவுப் பணியாளர் பயிற்சிநெறி (உயர்தரம்) சித்தி அல்லது க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் 03 பாடங்களுக்கு குறையாத சித்தி.

**பிணை விபரம்:- ரொக்கம் 5000/= ஆதனம் 25,000/=**

**பதவி:- விற்பனையாளர் - 308 - 15 எண்ணிக்கை - 02**
**சம்பள அளவுத்திட்டம்:- 42,000 - 700 X 10, 840 X 10 - 58,200**
கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சுற்று நிருபங்களுக்கு அமைய ஏனைய படிகளும்

**கல்வித்தகைமைகள்:-**
(அ) கூட்டுறவுப் பணியாளர் 17 ஆவது சம்பளத்திட்டத்தில் 05வருடங்களுக்கு குறையாத அனுபவம்.
(ஆ) கூட்டுறவுப் பணியாளர் சாதாரண பயிற்சிநெறியில் சித்தி அல்லது க.பொ.த.சாதாரண பரீட்சையில் கணிதம்,தமிழ் மொழி உட்பட 06 பாடங்களில் சித்தி.

**பிணை விபரம்:-** ரொக்கம 5000/=

**பதவி:- காவலாளி - 315 - 16 எண்ணிக்கை - 01**
**சம்பள அளவுத்திட்டம்:- 39,000 - 720 X 10 - 54,000**
கூட்றவு வேலையாளர் ஆணைக்குழு சுற்று நிருபங்களுக்கு அமைய ஏனைய படிகளும் .
**கல்வித்தகைமைகள்:-**
(அ) கூட்றவுப் பணியாளர் சம்பள அளவுத்திட்டம் 17 இல் ஒருவருடத்திற்கு குறையாத அனுபவம்.
(ஆ) ஐந்தாம் வகுப்பு சித்தியுடன் நல்ல தேகாரோக்கியம் உள்ளவர்.

**வயதெல்லை:-** 18 - 45 வயதுக்கிடையில் இருத்தல் வேண்டும்.
**விண்ணப்ப முடிவுத் திகதி:-** 05.05.2005
விண்ணப்பங்கள் யாவும் 9"X 4" படிவத்தில் சுயமாக தயாரித்து கல்வித்தகைமையின் நிழற்பிரதியுடன் தலைவர், வவு/கால்நடை வளர்ப்பாளர் கூட்றவுச்சங்கம்,பஜார் வீதி,வவுனியா என்ற விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படவேண்டும்.

தலைவர்
வவு/கால் நடைவளர்ப்பாளர் கூட்டுறவுச் சங்கம்,
பஜார் வீதி,வவுனியா.

(சி.11815)


## பார்படோஸ் டெஸ்ட் போட்டி

# நெல், நிட்னி பந்து வீச்சில் அபாரம் தொடரை கைப்பற்றியது தென்னாபிரிக்கா




பார்படோசில் நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகளுடனான மூன்றாவது டெஸ்ட்போட்டியில் நான்காவது நாளிலேயே தென்னாபிரிக்க அணி ஒரு இனிங்சாலும் 86 ஓட்டங்களாலும் வென்று தொடரைக்கைப் பற்றிவிட்டது.

நான்காம்நாளான நேற்று முன்தினம் தனது முதல் இனிங்சில் 521இற்கு எட்டுவிக்கெட் என்ற நிலையில் தொடர்ந்த தென்னாபிரிக்கா மேலும் ஒரு விக்கெட்டை இழந்து 549 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. பின்னர் தனது இரண்டாவது இனிங்சை தொடர்ந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி தென்னாபிரிக்காவின் அன்ருநெல்லின் பந்து வீச்சில் நிலை குலைந்து 166 ஓட்டங்களுடன் அனைத்துவிக்கெட்டையும் இழந்தது அவ்வணியின் கிறிஸ்கெய்ல், சர்வான்,வேவல் ஹின்ஸ் ஆகியோர் நான்கு பந்துகளில் ஆட்டமிழந்தனர். ஹின்ட்சின் விக்கட்டை நெல்லும் சர்வான், கெய்ல் இருவரினதும் விக்கெட்டுக்களை மக்காயா நிரினியும் வீழ்த்தினர். அன்ருநெல்32 ஓட்டங்களுக்கு ஆறு விக்கெட்டைக் கைப்பற்றினார். கொட்னி பிரவன் மட்டுமே மேற்கிந்தியத்தீவு சார்பில் அதிகூடிய ஓட்டமாக 68 ஓட்டங்களைப் பெற்றார்.லாறா13 ஓட்டங்களையும் சந்தர்போல் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.




## சம்பியன் பட்டம் வென்றார் ரொடிக்




அமெரிக்காவில் நடைபெற்ற க்ளேகோர்ட் சம்பியன் டென்னிஸ் இறுதிப்போட்டியில் பிரான்சின் செபஸ்ரியன் க்ரஸ்ஜீனை அமெரிக்க வீரர் அன்டிரொடிக் 6-2,6-2 என்ற செட் கணக்கில் வென்று கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளார்.சுமார் மூன்று வாரகாலமாக மணிக்கட்டில் ஏற்பட்டகாயம் காரணமாக ஓய்வில் இருந்து வந்து பங்கு கொண்ட ரொடிக்கின் முதலாவது தொடராகும். அத்துடன் இந்தத் தொடரின் மூன்றாவது வெற்றியுமாகும்.

அவரின் ஆட்டத்தைப் பாராட்டிய க்ரஸ்ஜீன் இவ்வாறான ஒரு ஆட்டத்தை இதுவரை கண்டதில்லை எனத் தெரிவித்துள்ளார்.



*இந்திய சுற்றுப்பயணத்தில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி டெஸ்ட் தொடரை சமன் செய்ததோடு, ஒரு நாள் தொடரை கைப்பற்றியது. இந்த சிறப்பு மிக்க வெற்றியால் பாகிஸ்தான் வீரர்களுக்கு செல்லும் இடமெல்லாம் ராஜ மரியாதை அளிக்கப்பட்டு வருகிறது. இஸ்லாமாபாத்தில் நேற்று முன்தினம் ரசிகர்கள் பூத்தூவி வாழ்த்த, உற்சாக பவனி வருகிறார் அணித்தலைவர் இன்சமாம் உல்ஹக்*

# மீண்டும் அணியில் இணைய அக்தருக்கு நெருக்கடி நிலை



பாகிஸ்தான் கிரிக்கெட்டில் பிரித்துப் பார்க்க முடியாத வீரராக இருந்த சோயப் அக்தர் நிலைமை இப்போது படு பரிதாபம். அணியில் இடம்பிடிக்க ஆளுக்கு சிபாரிசு தேட வேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

சோயப் அக்தர். பாகிஸ்தான் கிரிக்கெட்டின் அதிவேகப் பந்து வீச்சாளர். உலகின் அதிவேகப் பந்து வீச்சாளாரான இவருக்கும், அணித்தலைவர் இன்சமாமிற்கும் ஒத்துப்போகவில்லை. தனது பதவியே நிலையில்லாமல் இருந்ததால் அக்தர் மீது அதிகம் கோபப்பட முடியாமல் பொறுமை காத்தார் இன்சமாம். இந்தியத் தொடர் அவருக்கு பெரிய வெற்றி தேடித்தந்துவிட்டது.

அக்தர் இல்லாமலே வெற்றிபெற முடியும் என்று நிரூபித்துவிட்டார். அவர் சொன்னால், எதுவும்கேட்க பாகிஸ்தான் கிரிக்கெட்சபை இப்போது தயார். இதுதான் அக்தருக்குப் பிரச்சினை.மீண்டும் அணியில் நுழைவது சிக்கலாகிவிட்டது. பாகிஸ்தான் அணி அடுத்தமாதம் மேற்கிந்தியத்தீவு சுற்றுப்பயணம் செல்கிறது. இந்தத் தொடரில் இடம்பெற வேண்டும் என்று விரும்புகிறார் அக்தர்.

"முதலில் தனது உடல் தகுதியை அக்தர் நிரூபிக்கட்டும்.அதற்குப் பின்புதான் அணியில் அவரைச் சேர்ப்பதா,இல்லையா, என்பதை பரிசீலிப்போம்." என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டனர் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ஷாரியார் கான் மற்றும் தேர்வுக் குழுத் தலைவர் வாசிம்பாரி.

# 2008 ஒலிம்பிக் பதக்கங்களைக் குவிக்க சீனவீரர்கள் அமெரிக்காவில் பயிற்சி

அமெரிக்காவின் பிரபலமான வீரர், பயிற்சியாளர் ஆகியோரிடம் சீனாவைச் சேர்ந்த ஓட்டப்பந்தய வீரர்கள் தீவிரமாகப் பயிற்சி எடுத்து வருகின்றனர்.

இந்த முயற்சிக்கு நல்ல பலனும் கிடைத்திருக்கிறது. திறமையான பயிற்சியாளர்களிடம் பயிற்சிபெற்றோம் என்ற திருப்தி சீனர்களுக்கும், அருமையான வீரர்களுக்குப் பயிற்சி கொடுத்தோம் என்ற திருப்தி பயிற்றுனர்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது.

கிளைட் ஹார்ட் என்ற பிரபல அமெரிக்கப் பயிற்சியாளர் அவர்களுக்குப் பயிற்சி வழங்குகிறார். ஜியாங்போ, யாங் யாவ்ஷு, ஜாவ் ஜியாமின், ஹு செங்ஜியாங் என்ற நான்கு சீன வீரர்கள் அவர்களிடம் பயிற்சி பெறுகின்றனர்.

இவர்களில் ஜியாங் மட்டும் ஊஹான் என்ற சீன மாநிலத்தைச் சேர்ந்தவர், மற்றவர்கள் ஷாங்காய் நகரைச் சேர்ந்தவர்கள்.

மைக்கேல் ஜான்சன் என்ற பிரபல அமெரிக்க ஒலிம்பிக் வீரர் வாகோ என்ற இடத்தில் உள்ள இந்த மையத்தில் பயிற்சிமேற்கொண்டு ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கங்களைக் குவித்தார். அவருக்கு பேய்லர் ஹாட்என்ற பயிற்சியாளர் பயிற்சி அளித்தார். அதே மாதிரியான பயிற்சி இப்போது சீனர்களுக்கும் வழங்கப்படுகிறது. மைக்கேல் ஜான்சன் மட்டுமல்ல ஜெரிமி வாரினர் என்ற அமெரிக்கரும் இங்கு பயிற்சி பெற்று தங்கப்பதக்கம் வென்றார்.

## புதிய பயிற்சியாளராக மோடி?

இந்திய கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சியாளராக அவுஸ் அணியின் மிதவேல் பந்துவீச்சாளர் டொம் மோடி நியமிக்கப்படும் வாய்ப்பிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது இவரை ஓய்வுபெற்று செல்லும் ஜேன் ரைட் பரிந்துரைத்ததாக தெரிவிக்கப் படுகிறது.






*ஸ்பெயின் லீக்கால்பந்துப் போட்டி மாட்ரிட்டில் நடைபெற்றுவருகிறது வில்லாரவேன் அணிக்கு எதிராக சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தின்போது விதிமுறைக்கு மாறாக விளையாடியதற்காக ரியல் மாட்ரிட் அணி வீரர் ஜினெடின் ஜிடேனுக்கு சிவப்பு அட்டை காட்டுகிறார். நடுவர் . இந்த ஆட்டத்தில் ரியல் மாட்ரிட் அணி 2–1 என வெற்றி பெற்றது.*

# யாழ்.மத்திய கல்லூரி அணியை தோற்கடித்தது கிளி.ம.வி.அணி

பலம்வாய்ந்த யாழ்.மத்தியகல்லூரி அணியுடனான கடினப்பந்துப் போட்டியில் வளர்ந்து வரும் கிளி/ம.வி. அணிவெற்றி பெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 30 ஓவர்கள் கொண்ட இப்போட்டியில் 15 அகவைப்பரிவினர் கலந்து கொண்டிருந்தனர்.


நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். மத்திய கல்லூரி அணித் தலைவர் தனது அணியை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தார். முதலில் துடுப்பெடுத்தாடிய அவ்வணியினர் 25.5ஆவதுஓவரில் கிளி/ம.வி. வீரர்களின் துல்லியமான பந்து வீச்சில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழ[illegible] 92 ஓட்டங்களை மட்டுமே பெற[illegible]. இதில் நிதானமாகவும் அதிரடியாகவும் ஆடிய மயூரன் 48ஓட்டங்களையும், மனோசாந் 11ஓட்டங்களையும் கூடுதலாகப் பெற்றனர். கிளி ம.வி.சார்பாக சிறப்பாக பந்து வீசிய ம.ஜனகன் நான்கு விக்கெட்டுக்களையும், கி.கிரிசாந் மூன்று விக்கெட்டுக்களையும் ஆ.அனுசாந் இரண்டு விக்கெட்டுக்களையும், க.சஞ்சீவன் ஒரு விக்கெட்டினையும் பெற்றனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிளி/ம.வி.அணியினர். 93ஓட்டங்களை பெற வேண்டிய நிலையில் தமது துடுப்பாட்டத்தை மேற்கொண்டனர். யாழ்.மத்திய கல்லூரி அணிவீரர்களின் காத்திரமான பந்து வீச்சின் மத்தியிலும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய கிளி/ம.வி.அணியினர் 26ஆவது ஓவரில் 72 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தமது ஒன்பதாவது விக்கெட்டினையும் இழந்திருந்தனர்.


இந்நிலையில் ஆரம்பத்துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கி ஆடிக்கொண்டிருந்த சி.கிருபாகரனுடன் இறுதிவிக்கெட்டுக்காக ஜோடிசேர்ந்த சி.ரஞ்சீவ் அவருடன் நிதானமாக ஆடி 29ஆவது ஓவர் நிறைவில் 97 ஓட்டங்களைப்பெற்று வெற்றி இலக்கை அடைந்தனர். சி.கிருபாகரன் 25, சிரஞ்சீவ் 10 முறையே ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். இவர்களைவிட ஆ.அனுசாந் 12, யோ. நிரோசன் 10 என ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிரோஜன் நான்கு, அலன்ராஜ் இரண்டு, கோபிகன் தனுஜன் தலா ஒருவிக்கெட்டினையும் பெற்றனர்.



[illegible]த்திய கல்லூ[illegible] கிளி.ம.வி. அணியினர்



கிளி.ம.வி. அணியினர்



சிந்தனைக்கு

சாவுக்கும் அஞ்சாத வீரத்திற்கும், சுகத்திற்கும் இலட்சியப்பற்றிற்கும் எமது மாவீரர்களுக்கு நிகர் எவருமேயில்லை என நான் பெருமிதத்துடன் கூறுவேன்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 26-04-2005
தொலைபேசி 060-2213244 - மின் அஞ்சல்
தொலைநகல் 021-2283948 natham23 ela@ yahoo.com

# பேரங்கள்.

சுனாமி அனர்த்த உதவி நிதி முகாமைத்துவத்திற்கான பொதுக் கட்டமைப்புக் குறித்த ஊகங்கள் பல ஊடகங்களால் தெரிவிக் கப்பட்டு வருகின்றன. அடுத்த மாதம் நடுப் பகுதியில் கண்டியில் கூடும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு கூடும் முன்பதாக இப்பொதுக்கட்டமைப்புத் தொடர்பான அறிவிப்பு பெரும் பாலும் அரசாங்கத்தால் வெளியிடலாம் எனப் பலமான ஊகங்கள் வெளியிடப்பட்டுவருகின்றன.

இதன் நிமித்தம் லண்டனில் இருந்து திரும்பும் சனாதிபதி சந்திரிகா உடனடியாகவே ஜே.வி.பி. தலைமைப்பீடத்துடன் பேச்சுக்களை நடத்தவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன. அவ்வாறான தொரு சந்திப்பு இடம்பெறுமானால் இதில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எத்தகைய நிலைப்பாட்டை எடுப்பார் என்பதைப் பொறுத்தே பொதுக்கட்டமைப்பின் எதிர்காலம் குறித்து கருத்துக் கூறமுடியும்.

ஆனால், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜே.வி.பியினருடன் நடத்தவுள்ள பேச்சுவார்த்தைகளில் கடுமையான தொனியை வெளிப்படுத்தலாம் எனச் சில அவதானிகள் ஆருடம் கூறுகின்றனர் . ஆனால், இது எத்தகைய தூரம் உறுதித்தன்மை கொண்டது / சாத்தியப்பாடானது என்பது குறித்து தற்பொழுது எம்மால் எதுவும் கூறமுடியாது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடுமையான தொனியில் முடிவுகளை அறிவிப்பார் என்ற கருத்து வலுவடைந்துள்ளமை - கண்டியில் நடைபெறவுள்ள உதவி வழங்குவோர் மாநாட்டின் முன்னதாக அரசாங்கம் பொதுக்கட்டமைப்புக் குறித்துத் தீவிரமான தொரு செயற்பாட்டை மேற்க்கொண்டிருப்பதானதொரு தோற்றப் பாட்டை காட்டிக்கொள்வதற்காகவே ஆகும். இதன் தொடராகவே ஜே.வி.பி.யுடன் கடும் தொனியில் சந்திரிகா பேச்சுக்களை நடாத்து வார் எனத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

ஆனால், சனாதிபதி சந்திரிகாவினால் இத்தகையதொரு கடும் தொனியில் ஜே.வி.பியுடன் பேசமுடியுமா? அவ்வாறு பேசுவதனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இறுதியான தீர்மானங்கள் சிலவற்றை எடுக்க வேண்டிவரும். குறிப்பாக, அரசாங்கத்தை கலைப் பது தொடர்பாகவும்,அவர் தீர்மானிக்க வேண்டியதாக இருக்கும்.

ஏனெனில், ஜே.வி.பி. ஏற்கனவே, தனது விருப்பத்திற்கு மாறாக, சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க செயற்படுவாரேயானால் தமது நடவடிக்கை எவ்வாறானதாக அமையலாம் என்பதை வெளிப் படுத்தியுள்ளது என்றே கூறலாம். அதாவது, மேல்மாகாண சபை முதலமைச்சர் றெஜினோல்ட் கூரேக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தினை ஆதரித்து வாக்களிக்கலாம் என்ற அதன் நிலைப்பாடானது ஒரு முன்னெச்சரிக்கை என்றே கொள்ளத் தக்கதாகும்.

ஆகையினால், சனாதிபதி சந்திரிகா ஓர் ஆட்சிக் கவிழ்ப்பு முடிவு எடுக்கும் பட்சத்திலேயே அவரால் ஜே.வி.பி யுடன் கடும் தொனியில் பேசமுடியும். ஆனால், சனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைகள் அத்தகைய சமிக்கைகளைக் கொண்டவையாக இல்லை. ஜே.வி. பியுடன் கலந்தாலோசித்த பின்னரே பொதுக்கட்டமைப்புக் குறித்த முடிவு எடுக்கப்படும் என்பதாகவேயுள்ளது.

ஆகையினால், சனாதிபதி சந்திரிகாவின் இம்முடிவானது - அதாவது, கலந்தாலோசனை என்பது - ஜே.வி.பியுடன் அவர் கடும் தொனியில் பேசுவதற்குத் தயாராக இல்லை என்பதே ஆகும். ஜே.வி.பியுடன் புதிய பேரங்களில் ஈடுபடத் தயாராகிவிட்டார் என்றே அர்த்தம் கொள்ளத்தக்கதாகும். ஏனெனில், சர்வதேச நிதி கிடைக்க வேண்டும் என்பதற்காக அவர் தனது அரசாங்கம் கவிழ் வதை பார்த்துக் கொண்டிருக்கப் போவதில்லை.

ஏனெனில், இம்முறை ஆட்சி அமைப்பதற்காகச் சனாதிபதி மேற்கொண்ட செயல்கள் அனைத்தும் சனநாயக விரோதமானவை. அதாவது, கடந்த அரசாங்கங்கள் கவிழ்ப்பில் இருந்து சிறுபான்மை அரசாங்கம் ஒன்றை அமைத்து தற்பொழுது நடத்திவரும் சனநாயக விரோத ஆட்சி வரை அனைத்தும் மக்கள் விரோதமானவையே. ஆகையினால், மீண்டும் ஒரு தடவை மக்களிடம் வாக்குக்கேட்டுப் போகும் நிலையில் சனாதிபதி சந்திரிகா இருக்க வாய்ப்பில்லை.

இது ஒருபுறம் இருக்க, ஜே.வி.பி.கூட பொதுக்கட்டமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்துவரினும், அரசாங்கத்தைக் கவிழ்ப்பதில் அக்கறை கொண்டதாக இல்லை. ஏனெனில், அத்தகையதொரு கவிழ்ப்பு இடம்பெறுமானால், அடுத்த பொதுத் தேர்தலில் ஜே.வி.பி.க்கு பாராளுமன்றத்தில் தற்போதுள்ள 39 ஆசனங்கள் கிடைக்கப்பெற மாட்டாது என்பது அதற்கு நன்கே தெரியும்.ஆகையினால் ஆட்சிக்கவிழ்ப்பு என்பது ஜே.வி.பியும் விருப்பப்படுவதாக் இல்லை.

இதனால், சனாதிபதி சந்திரிகாவும், ஜே.வி.பி.யும் தமது நலன் கள் பாதிப்படையாத வகையில் பெரும் பேரங்களிலேயே இறங்கக் கூடும். இப்பேரங்கள் தமிழர் தயாகப் பகுதியில் புனர்வாழ்வு, புனர் நிர்மாணப் பணிகளுக்கு முதன்மையளிக்காதவையாகவும், அதே வேளை, ஐ.ம.சு முன்னணி அரசாங்கத்தைப் பேணுவதாகவும் அமை தல் வேண்டும். அதாவது, தமிழ் மக்களையும், உலகையும் ஏமாற்றும் வகையிலும், நிதியுதவி கிட்டும் வகையிலும் காலத்தை இழுத்தடிப்புச் செய்வதற்கும் அவசியமானதாகும்.

ஆகையினால் , சனாதிபதிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான பேச்சானது கடும் தொனியில் இடம்பெறும் இறுதிக்கட்டப் பேச்சாக இருக்கும் என எதிர்பார்ப்பது தவறாகும். மிக இரகசியமான தாகவும், இருதரப்பு நலன்களைப் பேணுவதாகவும், உலகை ஏமாற்றும் தன்மை கொண்டதாகவுமே அது இருக்கும் என எதிர்பார்த்தலே பொருத்தப்பாடானதாகும்.

# சுதந்திர முன்னணி அரசைக் கவிழ்ப்பதற்கு பல அரசியல் கட்சிகள் திட்டமிட்டுள்ளன

## அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க தெரிவிப்பு

(லண்டன்)

சுதந்திர முன்னணி அரசாங் கத்தைக் கவிழ்ப்பதற்கு பல்வேறு அரசியல் கட்சிகள் திட்டமிட்டுள் ளன எனஅமைச்சர் அநுரா பண்டார நாயக்க தெரிவித்துள்ளார்.

லண்டனிலுள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சி கிளை அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற் றிய வேளை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

இதனைச் சரியாகப் புரிந்துகொண் டால் சுதந்திர முன்னணியைப் பாது காப்பது கஸ்டமானதாக இருக்க மாட்டாது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் உருவாக்கிய கூட்டணி நாட்டைக் கட்டியெழுப்புவதை நோக் காகக் கொண்டதே தவிர தனிப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதை இலக்காகக் கொண்டதல்ல என தெரி வித்துள்ளார். தேர்தலின் போது அளிக் கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற் றுவதில் சுதந்திர முன்னணி அரசு பல தடைகளை எதிர்கொள்கிறது. இது முறியடிக்கப்பட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும்.

ஐ.தே. கட்சியை அதிகாரத்திற்குக் கொண்டு வருவதற்கு நாட்டு மக்களுக்கு எவ்வித தேவையோ, அவசரமோ இல்லை. 1956ஆம் ஆண்டின் பண்டார நாயக்க புரட்சியின் மற்றுமோர் நடவடிக்கையாக ஐ.ம. சு.முன்னணி விளங்குகின்றது.ஜே. வி.பியினர் இப்புரட்சியின் பிள்ளை களாகத் திகழ்கின்றனர் என மேலும் தெரிவித்துள்ளார். இக்கூட்டத்தில் ஜே.வி.பியின் லண்டன் கிளைப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

# சுனாமி மரணச்சான்றிதழ்களை வழங்க சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டும்

## — உச்ச நீதிமன்றம் அரசாங்கத்திற்கு சிபாரிசு

சுனாமிஅனர்த்தத்தின் போது காணாமல் போனவர்கள் தொடர்பாக ஆறுமாதங்களுக்குள் மரணச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வ தற்கு இடமளிக்கும் வகையில் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரும்படி உச்சநீதிமன்றம் அரசாங்கத்திற்குச் சிபாரிசு செய்துள்ளது.

அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள சுனாமி அனர்த்த விசேட சட்ட மூலத்திற்கெதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள இருமனுக் கள் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளையில் உச்ச நீதிமன்றம் இந்தச் சிபாரிசைத் தெரிவித்துள்ளது.

"சின்சன்வூட்" எனும் அமைப்பும், பெண்சட்டத்தரணி ஒருவரும் இந்த மனுக்களைத் தாக்கல் செய்தி ருந்தனர்.

சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து ஒரு மாதத்தின் பின்னர் சுனாமி அனர்த்தத் தின் போது காணாமல் போன நபர்கள் தொடர்பாக மரணச் சான்றிதழ்களைப் பெறுவதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும் என்று இந்த திருத்தச் சட்ட மூல யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து உச்ச நீதிமன்றம் மரணச் சான்றிதழ்களுக்கு விண்ணப் பிப்பதற்கான கால எல்லையை ஆறு மாதங்கள் வரை நீடிக்கும் படி உத்தர விட்டுள்ளது. அத்துடன் காணாமல் போன இளவயதுச் சிறுவ்கள் சம்பந்த பட்ட விடயத்தில் இந்தக் கால எல்லை ஒரு வருடமாக நீடிக்கப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் அரசாங் கத்திற்குச் சிபாரிசு செய்துள்ளது.

இதேவேளை சுனாமியால் அனாதைகளான சிறுவர்களின் சேம நலன் தொடர்பான நடவடிக்கைகளை மாகாண நிறுவனங்களின் ஊடாக மேற்கொள்வதற்கும் இந்தச் சட்ட மூலத்தில் யோசனை தெரிவிக்கப்பட் டுள்ளது.

ஆயினும் இந்த சேமநல நடவடிக் கைகள் மத்திய அரசாங்கத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் அரசாங் கத்திற்குச் சிபாரிசு செய்துள்ளது.

உச்ச நீதிமன்றம் இந்த மனுக்கள் தொடர்பான விசாரணையை நேற்றுப் பூர்த்தி செய்துள்ளது.

இது தொடர்பான தீர்ப்பு சனாதி பதிக்கும் சபாநாயகருக்கும் அறிவிக் கப்படவுள்ளது.

# மக்களுக்குப் பொருத்தமான கொள்கைகளை பிரதான கட்சிகள் கடைப்பிடிக்க வேண்டும்

## -மல்வத்த பீட மகாநாயக்கர் தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண்கின்றவேளை மக்களுக்குப் பொருத்தமான கொள்கைகளைப் பிரதான கட்சிகள் கடைப்பிடிக்க வேண்டுமென மல்வத்த பீட மகா நாயக்கர் தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.எல். பீரிஸ் உள்ளிட்ட குழுவினர் நேற்றுக்காலை அவரைச் சந்தித்த வேளை இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

இரண்டு பிரதான கட்சிகளும் மக் களின் பிரச்சினைக்குத் தீர்வு காண் பதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். இதேவேளை கொழும்பு ஆனந்தா கல்லூரி, கண்டி தேசியக் கல்லூரி ஆகியவற்றின் அதிபர்கள் சேவையிலிருந்து இடைநிறுத் தப்பட்டமை முறையானதல்ல என ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தபோது சில தேசியப் பாடசாலைகளின் அதிபர்கள் தவறு செய்திருந்தால் அவர்களுக்குப் பொருத்தமான தண்டனை வழங்கு வது அநீதியான செயல் அல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கல்வியில் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்க பொருத்தமான கல்விக்கொள்கை இல்லை

## இலவசக் கல்வியைப் பாதுகாக்கும் அமைப்பு குற்றச்சாட்டு

கல்வித்துறையிலுள்ள பிரச்சினை களுக்குத் தீர்வு வழங்கும் அளவிற்கு அரசிடம் பொருத்தமான கல்விச் கொள்கைகள் இல்லையென இலவ சக் கல்வியைப் பாதுகாக்கும் அமைப் புத் தெரிவித்துள்ளது.

எந்த ஓர் கல்விக் கொள்கையை யும் நடைமுறைப்படுத்தாமல் நாட்டில் பாடசாலைக் கட்டமைப்பில மோசமான பாதிப்புக்கள் ஏற்பட் டுள்ளதென அவ் அமைப்பின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் மகிந்த ராஜசிங்க தெரிவித்தார். நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்து கருத்துத் தெரிவிக் கையில்,

பாடசாலைக் கட்டமைப்பில் பாரதூரமான பாதிப்பான நிலைமை ஏற்பட்டுள்ளது. அதுபோல் பல் கலைக்கழகப் பிரிவு தொடர்பாகவும் பாரதூரமான சிக்கல்கள் தோன்றி யுள்ளன. இவை அனைத்திற்கும் காரணம் நாட்டில் நிலையான அபிவிருத் திக்காக ஏற்படுத்தப்பட்ட தேசியகல்விக் கொள்கை ஒன்று இல்லையே என சுட்டிக்காட்டியுள்ளார்.

# சுனாமி அனர்த்த சனாதிபதி ஆணைக்குழு; விசாரணைகள் இன்று ஆரம்பம்

ஆழிப்பேரலை அனர்த்தம் குறித்து விசாரணை செய்யும் சிறிலங்கா சனாதிபதியின் விசேட ஆணைக்குழு தனது விசாரணைகளை இன்று ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

ஆழிப்பேரலை அனர்த்தம் குறித்து விசாரணைகளை மேற்கொள் வதற்காக சனாதிபதி சந்திரிகா குமார துங்கவினால் விசேட ஆணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் எச்.எஸ்.யாப்பா மற்றும் ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பி.எச்.கே.குலதிலக்க ஆகியோரினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வுள்ளன. பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இவ் விசாரணைகளுக் கான ஏற்பாடுகளை சனாதிபதி சட்டத் தரணி குமரன் இரத்தினம் முன்னெடுத் துள்ளார்.

## ஆர்ப்பாட்டம்

சேவை இடைநிறுத்தம் செய்யப் பட்டுள்ள பாடசாலை அதிபர்களை மீண்டும் சேவையில் ஈடுபடுத்துமாறு கோரி நேற்று டி.எஸ் சேனாநயக்க மற்றும் ஆனந்தாக் கல்லூரிகள் முன்பாக மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் மீன்பிடி உபகரணங்கள் கையளிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக தங்களது வாழ்வாதாரங்களை இழந்து தொழில் வாய்ப்புக்களின்றி வாழ்ந்து வரும் மக்களுக்கு ஒரு தொகுதி மீன்பிடி உபகரணங்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் வழங்கப்பட்டுள்ளன.

நேற்று முற்பகல் 11.00 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத் திட்டமிடல் இணைப்பாளர் பரமானந்தம் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. தமிழீழ தேசியக் கொடியினை கடற்புலிகளின் முல்லைத்தீவு நகரத் தளபதி தினேஸ் ஏற்றிவைக்க, தமிழர் புனர்வாழ்வுக் கழக கொடியினை ஆழிப்பேரலைக்குப் பின்னரான துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவை நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் வின்சன் ஏற்றி வைத்தார். தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம், கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான விநாயகம், முல்லைத்தீவு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் இராமமூர்த்தி, கடற் தொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத் தலைவர் ஆகியோர் சிறப்புரைகள் ஆற்றினர். ஆழிப்பேரலைக்குப் பின்னரான துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவை நிகழ்ச்சித் திட்டத்தின் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஒருங்கிணைந்த அனுசரணையின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும்வேலைத்திட்டச் செயற்பாடுகளில் ஒன்றான, "மீண்டும் கடலுக்குக் செல்லுதல்" என்ற செயற்திட்டத்திற்கமைய மீன்பிடித் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டே நேற்று முல்லைத்தீவு மக்களுக்கான முதற்கட்ட மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜேர்மன், நோர்வே நிதிப்பங்களிப்புடன் இந்த மீன்பிடி உபகர ணங்கள் வழங்கும் நிகழ்வில் கடல் சார் இயந்திரவியல் சேவைகள் நிறுவனப் பணிப்பாளர் லோகநாதன், முல்லைத்தீவு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் சிவனடியார், ஆகியோர் கலந்து கொண்டனர்.



கனடாவில் இடம்பெற்ற அன்னை பூபதி நிகழ்வில்...

# சாரதி அனுமதிப்பத்திரத்திற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்குக

(அலுவலக செய்தியாளர்)

சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கான விண்ணப்பங்களை நாளைய தினத்திற்கு முன்னர் கிளிமாவட்ட செயலக மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் பிரிவில் ஒப்படைக்குமாறு கிளிமாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் அறிவித்துள்ளார். சகலவாகனங்களுக்குமான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமையும் சனிக்கிழமையும் இடம்பெறவுள்ளன.

நாளைய தினத்திற்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.(சோ)

# இளைஞன் கடத்தல்

திருகோணமலையில் இளைஞர் ஒருவர் கடத்தப்பட்டுள்ளதாக உப்பு வெளிப் பொலிசார் தெரிவித்துள்ளனர். நேற்றுமாலை இந்த இளைஞர் வீட்டில் இருக்கும் போதே கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# சிறிலங்காவுக்கு யுத்த தளபாடங்களை வழங்க எந்நேரமும் பாகிஸ்தான் தயாராகவுள்ளது

### பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் பசீர்வலிமொஹமட்

(கொழும்பு)

சிறிலங்காவுக்குத் தேவையான நேரம் யுத்த தளபாடங்களை வழங்க தயாராகவுள்ளதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது

பாகிஸ்தானிய தயாரிப்புக் கண்காட்சி தொடர்பில் நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் அந்நாட்டின் உயர்ஸ்தானிகர் பசீர் வலி மொஹமட் இதனைத் தெரிவித்தார்.

சிறிலங்காவுக்கு உதவயளிக்க பாகிஸ்தான் எந்தவேளையிலும் தயாராகவே உள்ளது.அதற்கென உற்பத்திகளும் பாகிஸ்தானில் மேற்கொள்ளப்படுகின்றன.

அத்துடன்சிறிலங்காவுக்காக செயற்படுவதற்கும் பாகிஸ்தான் தயாராகவுள்ளதென அவர் மேலும் குறிப்பிட்டார். (32)

# கிளி.யில் வாராந்த சந்தை நேற்று முதல் ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

விவசாயம்,கடல்சார் உற்பத்தியாளர்களின் நன்மைகருதி 1983 ஆம் ஆண்டிற்கு பின்பு முதன்முதலாக நேற்று கிளிநொச்சியில் வாராந்த சந்தை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட கமக்கார அமைப்புக்களின் தலைவர் சு.மனோகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை நிதித்துறையைச் சேர்ந்த அன்பூரான் ஏற்றிவைத்தார். கரைச்சி பிரதேச விசேட ஆணையாளர் பொன் நித்தியானந்தன் கலந்து கொண்டு வாராந்த சந்தைப் பொருட்கள் விற்பனையினை வைபவரீதியாக ஆரம பித்துவைத்தார்.

நேற்று பகல் 10.30 மணிக்கு ஆரம்பமான வாராந்த சந்தையில் விவசாயிகள்தங்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனைசெய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். தொடர்ந்து ஒவ்வொரு வாரமும் புதன்கிழமை களில் காலை 6.00 மணி தொடக்கம் மேற்படி வாராந்த சந்தை நடைபெறவுள்ளதென கரைச்சி பிரதேச விசேட ஆணையாளர் தெரி வித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 1983 ஆம் ஆண்டிற்கு முன்பதாக மேற்படி வாராந்த சந்தை இடம் பெற்று வந்ததினையும் அதன் காரணமாக வியாபாரிகள் பெருமளவில் கிளிநொச்சி வாராந்த சந்தையில் பொருட்களை கொள்வனவு செய்து சென்றமையின் காரணமாக இப்பகுதி மக்கள் பெரும் நன்மையடைந்தமையும் இராணுவ நடவடிக்கை காரணமாகமேற்படி வாராந்த சந்தை இருதசாப்தங்களுக்கு மேலாக தடைப்பட்டிந்ததமையும் குறிப்பிடத்தக்கது. (சோ,46)

# யாழ்.குடா நாட்டில் நேற்று மினி சூறாவளி

(அலுவலக செய்தியாளர்)

யாழ்.குடாநாட்டின் கோப்பாய் தெற்கு மாதாகோவிலடியை அண்டிய பகுதிகளில் நேற்று மினி சூறாவளி தாக்கியுள்ளது.

நேற்றுப்பகல் 12.30 மணியளவில் பெய்த கடும்மழையுடன் வீசிய காற்றினாலேயே இவ் அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. இதில் ஆறுக்கு மேற்பட்ட வீடுகளின் கூரைத்தகடுகள் வீசப்பட்டுள்ளன மரங்களும் சாய்க்கப்பட்டுள்ளன. இவ்வனர்த்தமானது சுமார் அறுநூறு மீற்றர் சுற்றளவுப் பகுதியிலேயே நிகழ்ந்துள்ளது அதற்கப்பாற்பட்ட பகுதிகளில் சிறிய காற்றுடன் மழை பெய்துள்ளது. (சு)

# யாழ்.கிளி.மாவட்டங்களை இணைத்து பாரியளவிலான நீர்விநியோகத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை இணைத்து பாரியளவிலான நீர் விநியோகத்திட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி உதவிகளை வழங்கியுள்ளது.

மேற்படித்திட்ட அமுலாக்கலின் சாத்தியக் கூறுகள் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் வேலைத்திட்டங்களுக்கென ஆசிய அபிவிருத்தி வங்கி உடனடியாக ஒரு மில்லியன் அமெரிக்க டொலரை ஒதுக்கியுள்ளது.

இந்நீர் விநியோகத்திட்ட அமுலாக்கலின் அங்குரார்ப்பண வைபவம் நேற்று முற்பகல் யாழ். பொதுசன நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் வடபிராந்திய பிரதம பொறியியலாளர் ரி. பாரதிராஜன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

.இதில் கிளிநொச்சியிலுள்ள இரணைமடுக்குளம் மற்றும் சிற்றாறுகள் என்பவற்றின் நீரை யாழ். குடாநாட்டை நோக்கித் திசைதிருப்புதல், இம் மாவட்டத்திலுள்ள நிலத்தடி நீரைப் பாதுகாத்தல், யாழ்ப்பாணம் குடாக்கடல் ஏரிகளை நன்னீர் ஏரிகளாக்கல் போன்ற திட்டங்களை அமுல் செய்வதன் மூலம் யாழ். குடாநாட்டின் குடிநீர் பிரச்சினைகளைப் போக்கலாம் என்று கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டது. இத்திட்ட அமுலாக்கல் சாத்தியக் கூறுகள் பற்றி விரிவாக இவ் அங்குரார்ப்பண நிகழ்வைத் தொடர்ந்து இடம்பெற்ற மாநாட்டில் ஆராயப்பட்டது. (33)

# பாதுகாப்பு அதிகாரிகளுக்கு பாதுகாப்பு வேண்டுமாம்

பாதுகாப்பு அதிகாரிகளுக்கு முறையான பாதுகாப்பு வழங்க அரசாங்கம் தவறிவிட்டதாக முன்னாள் பிரதிப்பொலிஸ்மாஅதிபரும் ஹெல உறுமயவின் முக்கியஸ்த்தருமான கொடகதெனிய தெரிவித்துள்ளார்.

இதற்குஜெயரட்ணத்தின் கடத்தல் சிறந்த உதாரணமென அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடத்தப்பட்ட அல்லது காணாமல் போன பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் சிரேஷ்டபரிசோதகர் ஜெயரட்ணத்தை தேடிக் கண்டுபிடிப்பதற்த் ஆறு பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றுடன் படையினரின் விசேட குழுக்களும் அவரைக் கண்டுபிடிக்க உதவவுள்ளதாகவும் பொலிஸ்மா அதிபர் சந்திராபெனாண்டோ தெரிவித்துள்ளார்.

இவரது கடத்தலுடன் பல ஆயுதக்குழுக்களை சம்பந்தப்படுத்துகின்ற போதும் யார் கடத்தியிருப்பார்களென ஊகிக்கமுடிகிறது எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த 20 ஆம் திகதி கல்கிசை விடுதியில் உணவருந்திய பின் அங்கிருந்து புறப்பட்டுச் செல்லும் போது ஜெயரட்ணம் கடுமையான மது போதையில் இருந்ததாகவும் அவரை இருவர் தூக்கிச் சென்று வாகனத்தில் ஏற்றுவதனை விடுதியின் ஒளிப்பதிவு நாடா பதிவு செய் துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஒளிப்பதிவுநாடா பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## சிறிலங்கா...

வாக்களிக்கப்போவதாக ஜே. வி. பியின் மாகாண சபைக்குழு எச்சரித்துள்ளது.

இதன்போது கருத்துரைத்த சனாதிபதி; முதலமைச்சர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு பாரதூரமானது என்பதை தாம் அறிந்துள்ளதாகத் தெரிவித்தார்.இந்த நிலையில் அவருக்கு அவகாசம் வழங்கவேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார் எனினும் அதனை ஜே.வி.பி குழுவினர் ஏற்றுக்கொள்ளவில்லை இதன் அடிப்படையில் பெரும்பாலும் முதலமைச்சர் ரெஜினோல்ட்கூரே தமது பதவியில் இருந்து விலகும் வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இது குறித்து நேற்று இரண்டு பிரதான கட்சிகளும் தனித்தனியே கொழும்பில் கூடி ஆராய்ந்துள்ளன.

ஐக்கிய [illegible]சியக் கட்சியின் உறுப்பினர்கள் மாலை 4.00 மணிக் [illegible]ட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமைய[illegible] மேல்மாகாண மாகாணசபை முதல்வருக்கு எதி[illegible]ான நம்பிக்கையில்லாப் பிரேரணையை வெற்றிகொள்வது தொடர்பாக ஆராய்ந்தனர்.

மேல்மாகாண சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் உறுப்பினர்கள் வாக்களிப்பது தொடர்பாக இதுவரை முடிவுகள் எதுவும் எடுக்கவில்லை.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை வெற்றி கொள்வது தொடர்பாக மேல்மாகாண மக்கள் முன்னணியும், ஐக்கிய சனநாயகக் கூட்டணியுடனும் ஒத்துழைப்போடு செயற்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முடிவுகள் தொடர்பாக கருத்துரைக்கும் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மாகாண முதலமைச்சருக்கு எதிராகவே கொண்டு வரப்படுகிறது. அவர் பொறுப்புக்களைச் சரிவரச் செய்யாமையும் ஊழல் நடவடிக்கைகளுமே காரணமாகும். இந்தப் பிரேரணையை வெற்றிபெறச் செய்ய ஐக்கிய தேசியக் கட்சி செயற்படுகிறது. இதற்கான ஏனைய கட்சிகளின் ஆதரவைப் பெறவும் முயற்சிக்கிறோம். மாகாண சபைகளின் செயற்பாடுகளில் காணப்படும் மோசடிகளையும் ஊழல்களையும் அதன் மூலம் வெளிக்கொணரவுள்ளதாகவும் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

சனாதிபதியின் தலைமையில் ஆளும் கட்சி உறுப்பினர்களின் கூட்டம் 12.00 மணிக்கு நடைபெற்றது. நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்படுவதும் மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவைப் பெறுவதும் குறித்தே இதில் ஆராயப்பட்டுள்ளது. நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது முதல்வருக்கு ஆதரவு அளிக்கப் போவதில்லையென மக்கள் விடுதலை முன்னணியின் மாகாணசபை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மேல்மாகாண முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லப்பிரேரணையின் போது அதனை தோல்வி காண செய்ய வேண்டுமென பிரதி அமைச்சர்களின் குழு கேட்டுள்ளது. குழுவின் ஏற்பாட்டாளர் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா இது தொடர்பில் கருத்துரைக்கையில்; (ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் சிறு சிறு பிரச்சினைகள் இருக்கின்றன. எனினும் அவை தீர்க்கப்படக்கூடியவை.

எனவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை தகர்க்கும் முயற்சிகளை முறியடிக்கும் நடவடிக்கைகளை பிரதி அமைச்சர்களின் குழு மேற்கொண்டுள்ளதாகத் தெரிவித்தார் (32)

## தந்தை...

நடத்தப்படவுள்ளது.[illegible] கோவிலடியில் தமிழரசுக் கட்சிக் கிளை ஏற்பாடு செய்யும் இந்நி[illegible]வில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.ச[illegible]தன், க.துரைரெட்ணசிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (41)

## பொதுக்கட்டமைப்பு...

ஜே.வி.பி. உறுப்பினர்கள் உட்பட சிங்களத் தேசியவாதிகளைத் திருப்திப்படுத்த இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ள சந்திரிகா, அதே பதில் மூலம் உதவி வழங்கும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளையும், தனது முயற்சிகளை நம்பவைக்கும் ஒரு நடவடிக்கையாகவே இதைப்பார்க்க வேண்டியுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

*[illegible]பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது*